Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 19 வியாழக்கிழமை (04.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 228

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி

# ஜாதிக ஹெலஉறுமய வழக்குத் தாக்கல்

## இவ்வருடத்திற்குள் நடக்கவேண்டுமாம்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடத்திற்குள் நடத்தவேண்டுமென்ற உத்தரவைத் தேர்தல் ஆணையாளருக்கு விடுக்கவேண்டுமெனக் கோரி ஜாதிக ஹெல உறுமய நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.**

**அக்கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒமல்பே சோபித தேரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.**

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் ஒக்டோபர் 22 ஆம் திகதிக்கும், நவம்பர் 22 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறவேண்டுமென உத்தரவொன்றைப் பிறப்பிக்கவேண்டுமென அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம் மனுவில் தேர்தல் ஆணையாளரும், சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் 1999 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதாக வர்த்தமானியில் குறிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் 22 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி பதவியிலிருக்க முடியாது

### ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 22 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் அப்பதவியில் இருக்க முடியாது. அவ்வாறு தொடர்ந்தும் இருப்பதற்கு அவர் முயல்வாரெனில் அதற்கெதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் டிசம்பரில் நடத்தப்படாது பிற்போடப்படுமாயின் 2 ஆவது மக்கள் பேரணி நடத்தப்படுமென அவர் கூறினார். முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் பிரேம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆகஸ்ட் 8 இல் ஆளும்கட்சிக் கூட்டம்

(கொழும்பு)

ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் முதல்தடவையாக இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. கட்சியின் பிரதமர் வேட்பாளராக உபதலைவர் கரு ஜெயசூர்யா நியமனம்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக கட்சியின் உபதலைவர் கரு ஜெயசூர்யவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலங்களிலும் கட்சியின் உபதலைவரையே பிரதமர் வேட்பாளராக சம்பிரதாய பூர்வமாக நியமித்து வந்தது. இம் முறையும் அந்த வகையிலேயே செயற்பாடுகள் அமையுமென குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பிரதமர் வேட்பாளரை நியமிக்காது உள்ளதென சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் மக்களை திசை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை முன்னெடுத்தால் இலங்கையை மீளக்கட்டியெழுப்பலாம்!

### சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை இலங்கை அரசு முன்னெடுத்துச் செல்லவேண்டுமென சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது மாத்திரமன்றி சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனவும் எச்சரித்துள்ளது.

வரவுசெலவுத் திட்ட நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதோடு, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதன் ஊடாக முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் நீண்டகால அடிப்படையிலான சவால்களை சமாளிக்கமுடியுமெனவும் நாணய நிதியம் கூறியுள்ளது.

இதேபோல ஆழிப்பேரலைக்குப் பின்னர் இலங்கைக்குக் கிடைத்த நிதியுதவிகள் மூலம் பணவீக்கம் அதிகரித்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

அவ் உதவிகள் நாட்டின் ஸ்திரத் தன்மைக்கு உதவியுள்ளன. வேறு பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் பொருட்களின் விலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் செப்.1 ஆம் திகதி மாபெரும் மக்கள் எழுச்சி மாநாடு

### ஒரு லட்சம் மக்களைத் திரட்ட ஏற்பாடு

வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் வலியுறுத்தி கிளிநொச்சியில் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி தேசிய எழுச்சி மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் மக்கள் எழுச்சி நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுச் செயலாளர் அ.வேழமாகிலிதன் தலைமையில் நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணா, கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அரசியல் ஆலோசகரை சந்திக்க விருப்பம்

(மன்னார்)

மன்னாரிலுள்ள முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரைச் சந்தித்து கலந்துரையாட அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கலந்துரையாடலை மேற்கொள்ளத் தகுந்த திகதியொன்றைத் தருமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பான கடிதத்தினை மீளக்குடியமர்ந்த முஸ்லிம்கள் சார்பில் மன்னார் முஸ்லிம் அகதிகள் அமைப்பின் தலைவர் மைக்கல் காதர், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்தவாறு கொழும்பை சிதறவைக்கும் தொழில்நுட்பம் புலிகளிடம் தற்போது உள்ளது

### விமல் வீரவன்ச ஆவேசம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சியளிப்பதற்காக அண்மையில் இலங்கைக்கு வந்த அமெரிக்க இராணுவத்தினர் எமது இராணுவத்தினரின் உட்தகவல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் முகாம்கள் குறித்து, இராணுவத்தினர் அறிந்துவைத்துள்ள தகவல்கள் அனைத்தையும் கணினியில் பதிவு செய்துகொண்டு சென்றுவிட்டனர்.

இது மிகவும் பயங்கரமான நிலை. இவை அனைத்தையும் தெரிந்துகொண்டும் எமது தலைவர்கள் மௌனம் சாதித்து வருகின்றனர் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவரான விமல் வீரவன்ச, காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறியுள்ளார். அவர் தனது உரையில் மேலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349

011-2372952-3, 011-2360290, 011 - 2360291

e.mail:-jaffna@expoavi.com,reservations@expoavi.com.

எக்ஸ்போ எயா

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசுகள் மாறும்போது பாதுகாப்புக் கொள்கைகளும் மாற்றம்; இதனால் இராணுவத்தினருக்கே பெரிதும் பாதிப்பு

## ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஹிரான் ஹலங்கொட

(கொழும்பு)

ஒவ்வொரு அரசாங்கமும் மாறுகையில் பாதுகாப்புக் கொள்கைகளும் மாறுவதால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுவதாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஹிரான் ஹலங்கொட தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ‘ஆழிப் பேரலைக்கு அப்பால்’ எனும் தலைபபில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணவிக்கிரம மற்றும் ரணசூர பதக்கங்களைப் பெற்ற பிரிகேடியர் பலங்கொட தொடர்ந்து உரையாற்றுகையில் அரசாங்கத்தை கடுமையாகச் சாடினார். அவர் தனது உரையில்,

ஒரு அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை கிழக்கிற்கு மட்டுப்படுத்துமாறு கூறுகிறது. மற்றைய அரசாங்கம் இராணுவத்தை கிழக்கிலிருந்து விலகி வடககில் நிலைகொள்ளுமாறு கூறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது இவ்வாறான செயற்பாடுகளால் இராணுவத்தைப் பாதிக்கும் வகையிலேயே நடந்துகொண்டுள்ளன. இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பிரச்சினை ஏற்படக் காரணம் பாதுகாப்புப்படை அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதேயாகும்.

பயங்கரவாதிகளுக்கு எதிராகக் கடந்த இரு தசாப்தங்களாக அரசாங்கங்களின் கனவுகளுக்கமையவே வீரர்கள் போர் புரிய வேண்டிவந்தது.

இதனால் வீரர்களின் நிலை பலவீனமடைந்தது. 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பின்னர் படையினர் முகாம்களில் முடக்கப்பட்டனர்.

1994 ஆம் ஆண்டு மீண்டும் அதே நிலையே ஏற்பட்டது. 2002 இல் மீண்டும் படைவீரர்கள் முகாம்களில் முடக்கப்பட்டனர். இவ்வாறான நிலையில் போர் புரிவது எப்படி?

பயங்கரவாதத்திற்கு முகம் கொடுத்துள்ள ஏனைய நாடுகள் எவ்விதம் செயற்படுகின்றன என்பது பற்றி நான் அடிக்கடி நிர்வாகிகளுக்கு எடுத்துக் கூறி வந்தேன். இந்நாட்டு அரசாங்கங்கள் கடைபிடித்த அணுகுமுறைகள் காரணமாக யுத்தத்தில் வெற்றிபெற வழிகிடைக்கவில்லை எனவும் மேலும் தெரிவித்தார்.

பேராசிரியர் சுசந்த குணதிலக, முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிறில் ரணதுங்க, முன்னாள் பிரதி பொலிஸ மா அதிபர் எச்.எம்.ஜி.பீ.கொட்டகதெனிய, ஜே.வி.பி. தலைவர் சோமவனச அமரசிங்க, அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் இநதக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (ற-4)

# ஆயுதக் கொள்வனவில் கடற்படை புறக்கணிப்பு கடற்படை அதிகாரி ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

மூன்று வருட யுத்தநிறுத்த காலத்தில் கடற்படையினருக்கான ஆயுத தளபாடக் கொள்வனவுகள் மட்டுப்படுத்தப்பட்டு தாம் புறக்கணிக்கப்படுவதாக கடற்படையின் அதிகாரி ஒருவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக படையதிகாரிகளுக்குவிளக்கமளிக்கும் கூட்டத்தின் முடிவில் கடற்படையின் எஸ்.எல்.என்.ரணதீரவின் கட்டளை அதிகாரி லெப்.கொமாண்டர் குலரத்னவே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளரிடம் ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக விளக்கம் கோரினார்.

இதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன பதிலளிக்கையில், கடற்படையினர் ஒரு போதும் புறக்கணிக்கப்படவில்லை. கடற்படையினருக்கு அதிவேகத் தாக்குதல் படகுகளைக் கொள்வனவு செய்யவும் ஆழ்கடல் ரோந்து கப்பல்களை வாங்கவும் அதிவேகத் தாக்குதல் படகுகளின் பீரங்கிகளின் தரத்தை உயர்த்தவும் பெருமளவில செலவிடப்பட்டிருப்பதாகவும குறிப்பிட்டார்.

இதன் பின்னர் காங்கேசன்துறையிலுள்ள வடபகுதி கடற்படை கட்டளைத் தலைமையகத்தின் பிரதித் தளபதி கொமாண்டர் சோமதிலக இதே விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பினார்.

ஆயுதக் கொள்வனவுகள், படையதிகாரிகள் தொடர்பான தகவல்கள் ஆங்கில வார இதழ்களில் வெளியாகிவருவதாகவும் இதன் சிங்கள மொழி பெயர்ப்புக்களை சிங்கள நாளேடுகள் வெளியிடுவதால் படையினர் மத்தியில் உளரீதியான சோர்வு ஏற்படுவதாகவும் குறிப்பிட்ட அவர் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (ற-4)

# இராசிபலன்

**04.08.2005**
**(ஆடி 19, வியாழக்கிழமை)**
**ஆடிஅமாவாசை விரதம்**
**சதுர்த்தசி காலை 7.14 மணிவரை**
**பூசம் பின்னிரவு 5.24 மணிவரை**
**இராகுகாலம் 1.34 - 3.04 மணிவரை**
**சுபநேரம் 7.34 -9.04 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | புதிய விடயம், மனச்சஞ்சலம், காரியதாமதம், தெய்வசிந்தை. |
| இடபம் | பிரயாண நன்மை, உறவினர் வருகை, நல்ல முயற்சி, தெய்வதரிசனம். |
| மிதுனம் | காரியதாமதம், சுபசெலவு, அதிகவார்த்தை, சிந்தனை மிகுதி. |
| கடகம் | பிரயாணம், போசனசுகம், அறிஞர் சந்திப்பு, நல்ல முயற்சி. |
| சிங்கம் | தொழில் நன்மை, இடமாற்றம், வாக்கு மேன்மை, முயற்சி தாமதம். |
| கன்னி | நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை, பெருமையடைதல், குடும்பசுகம். |
| துலாம் | தெய்வ சிந்தை, அதிகாரம், உற்சாகம், பிறர் உதவி. |
| விருச்சிகம் | வீண்பயம், புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு. |
| தனுசு | வாகன பயம், அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தடங்கல். |
| மகரம் | தெய்வ சிந்தை, நல்ல செய்தி, கலந்துரையாடல், தொழில் விருத்தி. |
| கும்பம் | சத்துரு ஜெயம், ஆரோக்கியம், பெரியோர் சந்திப்பு, நல்ல முயற்சி. |
| மீனம் | குடும்பக் கவலை, காரிய தாமதம், சொத்துப் பிணக்கு, உடல் நலக்குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# கி. சே. பற்றாக் குறையால் சுனாமி வேலைகள் பாதிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் 405 கிராம சேவையாளர்கள் தேவையாகவுள்ள போதிலும் தற்பொழுது 300 பேர் மட்டுமே கடமையில் உள்ளதாகவும், யாழ்.மாவட்டத்தில் 105 கிராம சேவையாளர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளதாகவும் யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக் கிராம சேவையாளர் வெற்றிடங்களை நிரப்பாமையால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் வேலைத்திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு பொது வேலைத் திட்டங்களையும் அமுல் நடத்துவதில் காலதாமதமேற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-43)

# அதிகாலையில் தீ விபத்து வர்த்தக நிலையங்கள் சேதம்

(கொழும்பு)

பொரலஸ்கமுவ சந்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் சில கடந்த திங்கட்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்துள்ளன.

அதிகாலை 4.00 மணியளவில் தீ பற்றியிருக்கலாம் என்றும் எனினும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

தீ பரவி 30 நிமிடங்களில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் தீயினால் 4 கடைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், மின் ஒழுக்கு இவ் தீ விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. (அ-9)

# சாவ. வர்த்தகர்களுக்கு சைக்கிள் பாதுகாப்பிடம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர வர்த்தகர்களின் நன்மை கருதி நகர சபையால் சைக்கிள, மோட்டார் சைக்கிள்களிற்கான பாதுகாப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மாதாந்தக் கட்டண அறவீட்டு அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பிடங்களில் வர்த்தகர்களிற்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு இம்மாதம் முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

இதனையடுத்து நவீன சந்தை முன்பாக கடைகளருகே சைக்கிள், மோட்டார் சைக்கிள் நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. (அ-21)

# நீதிநேர்மையாக விசாரணை நடத்தக் கோரிக்கை

(திருநெல்வேலி)

மாமனிதர் தராக்கி டி.சிவராம் படுகொலை தொடர்பாகத் தங்களைச் சந்திக்குமாறும், விசாரணை தொடர்பிலுள்ள தடங்கல்களைப் போக்குவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்த போதிலும், பொலிஸ் மா அதிபர் சுதந்திர ஊடகவியலாளர் இயக்கப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்தும் தற்போது அவ்வியக்கத்தின் பிரதிநிதிகளைச் சநதிக்க முடியாதெனத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் இந்தக் கூற்று கொலையாளிகளைப் பாதுகாக்க உதவுவதுடன் பொலிஸ் மா அதபர் ஏற்கனவே குறிப்பிட்ட அரசியல் கட்சிகளைப் பாதுகாககும ஒரு நடவடிக்கையுமாக அமையும்.

எனவே, இவ் விடயத்தில் பொலிஸ்மா அதிபர் நீதியாகவும் நியாயமாகவும் நடக்க வேண்டுமென்று யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இக் கடிதத்தின் பிரதி சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்துககு அனுப்பப்பட்டுள்ளது. இக் கடிதத்தில் சிவராம் கொலை விசாரணையை நீதியாகவும் நேர்மையாகவும் பொலிஸார் நடத்துவதுடன் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்றும் யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (து-43)

# நிக்கொட் நிறுவன உதவியுடன் கமநல சேவை நிலையங்கள்

யாழ்.மாவட்டத்தில் கரவெட்டியிலும், சண்டிலிப்பாயிலும் நிக்கொட் நிறுவனத்தின் உதவியினால் 1 கோடி ரூபா செலவில் இரு கமநலச் சேவை நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்விரு இடங்களிலும் கமநலச் சேவைநிலையங்களை அமைக்கவேண்டும் என நீண்டகாலமாக விவசாயிகள் வவசாய அமைச்சைக் கோரியிருந்தபோதும் தற்போது தான் விவசாய அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இவ்விரு இடங்களிலும் கமநலச் சேவை நிலையங்களை நிர்மாணிப்பதற்கான காணிகளை விவசாயிகள்கொள்வனவு செய்துகமநலச் சேவைத்திணைகளத்திற்கு வழங்கியுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேசத்தில் மூததவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இயங்கிவரும் விவசாயிகள் கூடத்திற்கு அருகாமையில் இக்கமநலச் சேவை நிலையக் கட்டிடம் அமையவுள்ளது. (அ-52)

# எஸ்.பியின் வழக்கு மேன்முறையீடு

(கொழும்பு)

முனனாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கும் கொழும்பு மேல் நீதிமன்றத் தீர்ப்பை இரத்துச் செய்யும்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இலஞ்ச ஊழல் சட்டத்திற்கு தவறான முறையில் விளக்கமளித்தே இந்தத் தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கியுள்ளார் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கொமிசியக் கூட்டம்

யாழ்.மறை மாவட்ட புனித - மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.மறைக்கல்வி மண்டபத்தில், கொமிசியத்தலைவி சகோதரி வைலற் இம்மானுவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பை பிரதமர் அழைக்கிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாட அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காகவே இச்சந்திப்புக்குப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனின் ஊடாகவே இந்த அழைப்பினை அவர் விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே சந்திப்பு நிகழ்வதில் ஒரு பிரச்சினையும் இல்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் பிரதமரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

பிரதமர் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் அதனையிட்டு தமிழ்மக்கள் மகிழ்ச்சியடையப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-04)

# முஸ்லிம்களுடன் பேசாமல் பொதுக்கட்டமைப்பு; இதற்காகவே ஒத்துழையாமைப் போராட்டம்

## –ரவுப் ஹக்கம

ஜனாதிபதித் தேர்தலை தவிாபதற்காக ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைகக முடியும்.. ஆனால் அவரால் அடுதத ஜனாதிபதித தோதலை தாமானிகக முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் இன்னொரு பொதுத் தேர்தலை இந்த வருடத்தில் நாம் சந்திககும் சாத்தியங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மடவளை மதீனா தேசியப் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜூலை மாதம் வாக்குறுதிகளுக்குப் பொருத்தமானது. அவ்வாறு ஜூலை மாதம் 15ஆம திகதி கொடுத்த வாக்குறுதியினால் ஏற்பட்ட வினையினை நாம் இன்று வரை அனுபவிக்கிறோம். தான் பதவிக்கு வந்ததும் ஜூலை 15ஆம் திகதியுடன் ஜனாதுபதுப பதவியை இல்லாமல் செய்வேன் என 1995 ஆம் ஆண்டில் எங்களுடைய தற்போதைய ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதி காற்றில பறநத காலத்தில் இருந்து ஏற்பட்ட் கஷ்டத்தை நாங்கள் இன்னும் அனுபவிக்கின்றோம்.

இன்று முஸ்லிம் சமூகத்தின் அரசியல் முசசநதிக்கு வநதிருக்கின்றது. இன்றைய அரசியலில் எமக்கு மூன்று பாதைகள் இருக்கின்றன. இரண்டு பாதைகள், இரண்டு பிரதான வேட்பாளர்கள், மற்றைய பாதை தனியானது. இன்று மக்கள இவற்றை உன்னிப்பாக அவதானிக்கின்றனர். இந்நிலையில் நாங்கள் அவசர முடிவுகளை எடுக்க முடியாது.

இன்று காணப்படுகின்ற அரசியல் சூழல் மிகவும் பயங்கரமானது. சர்வதேச சமூகம் இந்நாட்டில் கூடுதலான தலையீட்டினை கொண்டிருக்கிறது. ஆட்டுவிப்பவர்கள் யாராகவும் இருக்கலாம். ஆனால் ஆடுபவர்களைத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

இநடநிலையில் முஸ்லிம் சமூகம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும். கடந்த ஐந்து வருடங்களில் நான் பெற்ற அனுபவங்களின்படி இந்த வருட முடிவுக்குள் இன்னுமொரு பொதுத் தேர்தலை சந்திக்க வாய்ப்பு காணப்படுகின்றது. இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் 5 வருடங்களுககுள நான்கு பொதுத் தேர்தலை நடத்தி சாதனை படைக்கபபோகின்றோமா? என்பது தான் இப்போதுள்ள நிலையாகும். இதற்கு அடிப்படைக் காரணம் இரண்டாவது தடவை ஜனாதிபதியாக இருப்பவருக்கு மூன்றாவது தடவை ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதே.

முன்னர் போன்று முஸ்லிம்களை சமாளித்து ஏமாற்ற முடியாது. இரண்டு பரதான கட்சிகளும் வடகிழக்கில் உள்ள முஸ்லிம்களை ஏமாற்றியிருக்கினறன. இதை வடகிழக்கிற்கு வெளியில் உள்ள முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும். இரு வேட்பாளர்களில் ஒருவரை ஆதரியுங்கள் என வடகிழக்கு முஸ்லிம்களிடம் சொல்லும்போது இரு கட்சிகளும் துரோகம் செயத வடயங்கள பற்றி நான் என்ன பதில் கூறுவது.

பொதுக்கட்டமைப்பை முஸ்லிம்களை கலந்து பேசாமல செய்தது பிழையென்று கூறும் அதே நேரம் பொதுக்கட்டமைப்பு சரி என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. எனவேதான் நாங்கள் ஒத்துழையாமைப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். இதுவே எங்களுககு இருககிறை ஒரே கதவு. ஏனெனில் அடுத்த தலைமுறை வேறு கதவுகளைத் திறப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கதவுகளைத் திறக்கா



மல் வைப்பதற்கு எமக்கு இருக்கின்ற ஒரே வழி ஒத்துழையாமைப் போராட்டமே. இந்த ஒத்துழையாமைப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் நாம் பிரிந்துவடாமல் இருக்க வேண்டும் என ரவூப் ஹக்கீம் அங்கு உரையாற்றுகையில் மேலும தெரிவித்தார். (ற-4)

## ஏலவிற்பனை

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையில் கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அடைவுவைத்து மீட்கப்படாத பொருட்கள் ஏலத்தில் விற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நகைகள் எதிர்வரும் 19, 20,21ஆம் திகதிகள் வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-35)

## சுகாதார நிலைமை ஆராய்வு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மற்றும் பளை பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தேநீர்ச்சாலைகள், உணவகங்களில் சுகாதார குறைபாடுகளை நிவர்த்திசெய்யுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர்கேட்டுள்ளார். கடந்த கிழமை அப்பகுதிகளுக்கு விஜயம் செயத தமிழ்ழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேரில் தேநீர் சாலைகள், உணவகங்களை பாாவையிட்டு சுகாதாரச் சாகேடான பகுதிகளை படம்பிடித்தார்.

இவருடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளரும், கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளரும் சென்றிருந்தனர். (ற-35)

# சேது சமுத்திரத் திட்டத்தால் சுற்றடாலுக்கு ஏற்படும் பாதிப்பு

## இரு நாடுகளும் 3ஆம் சுற்றில் ஆராய இணக்கம்

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டத்தின் ஊடாக சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கும் அது தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் இந்தியாவும் இலங்கையும் இணங்கியுள்ளன.

இந்தியா, இலங்கை நிபுணர்கள் மட்டத்தில் இந்தியாவில் புதுடில்லியில் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் துறைமுகங்கள் மற்றும் விமான சேவை அமைச்சின் ஆலோசகர் ஆரியரத்தன கேலகே தலைமையிலான நிபுணர்கள் குழு இதில் கலந்துகொண்டனர்.

இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு பங்குபற்றிய குழுவிற்கு அந்நாட்டு கடற்படை திணைக்களத்தின் செயலாளர் யோசப் கலந்து கொண்டுள்ளார்.

சேது சமுத்திர கப்பல் கால்வாய்த்திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து பல்வேறு துறைசார்ந்த நிபுணர்களாலும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது சுற்றாடல் தொடர்பான விரிவான ஆயவு அறிக்கை ஒனறு இந்தியப் பிரதிநிதிகள சமாபபிததிருந்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக திட்ட அறிக்கையையும் சேது சமுத்திர கப்பல் கால்வாய்த்திட்டம் நடைமுறைப்படுததபபடும் முறை தொடாபாக விளக்கும் அறிக்கையையும் இந்தியப் பிரதிநிதிகள் முன்வைத்துள்ளனர்.

கடல் பகுதியின் இயற்கை சமநிலை குறித்தும் கடல்வளம் மற்றும் அதனோடு தொடர்புடைய கைத்தொழிலில் ஈடுபடுவோர் தொடர்பான பாதிப்புக்கள் குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது விரிவாக ஆராயப்பட்டது.

கடற்படை நடவடிக்கையின் போது ஏற்படும் அவசர நிலைமைகள் தொடர்பாகவும் இரு நாட்டு பிரதிநிதிகள் பேசசுவார்ததை நடத்தியதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதிநிதிகள் முன்வைத்துள்ள அறிக்கைகளை ஆராய்ந்து அடுத்துவரும் பேச்சுவார்த்தையின் போது இந்தத்திட்டம் தொடர்பாக விளக்கமளிக்க இலங்கைப் பிரதிநிதிகள் திட்டமிட்டுள்ளதாகக குறிபபிடப்படுகின்றது.

சேது சமுத்திர கப்பல் கால்வாய்த்திட்டம் தொடர்பாக நிபுணர்கள் மட்டம் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவாத்தை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ-9)

# மஹோற்சவ குரு தாக்கப்பட்டார்

## சட்டநாதர் கோயிலில் சம்பவம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் மஹோறசவ குரு சிவசிறிதாணு வாசுதேவக்குருக்கள் இளைஞர் குழுவொன்றினால் தாக்கப்பட்டதால் தலையில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டுள்ளதாகவும் அவரது தலைக்காயத்துக்கு 13 இழைகள் போடப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

சம்பவம் நடந்த தினத்தன்று மோட்டார் சைக்கிளில் நம்பர் தகட்டை மறைத்துக்கொண்டு வந்த இளைஞர் குழுவொன்றே இத் தாககுதலை நடத்தியதாகவும் இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படடுள்ளதாகவும கூறபபடுகிறது.

மேற்படி ஆலயத்தில் அம்மன் திருவிழா ஆரம்பமான 3ஆம் நாளன்றே இத தாககுதல சம்பவம் நிகழ்ந்துள்ளது. கொடியேற்றக் குருவான இவர் காயமுற்று ஆஸ்பத்திரியில அனுமதிக்கபபட்டதால் ஆலய திருவிழாவைத் தொடர்நது நடத்த ஆலய நிர்வாகம் பலத்த சிரமத்தின் மத்தியில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியததின் அனுசரணையுடன் புதிய குரு ஒருவரை நியமிதது திருவழாவை தொடர்நது நடத்தி வருகிறது.

கோவில் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் மஹோற்சவ குரு இவ்விதம் தாக்கப்பட்டது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (து-51)

# சிறுவன் படையினரால் தடுத்து வைப்பென பெற்றோர் க.கா.குழுவில் முறைப்பாடு

27.7.2005ஆம் திகதி வலம்புரியில் ''சிறுவன் படையினரால் தடுத்துவைப்பென பெற்றோர் க.கா.குழுவில் முறையீடு'' என்ற தலைப்பில் வெளியான செய்தி உணமையானது அலல என பலாலி யாழ்.பாதுகாபபு நடவடிககை தலைமையகம் கீழ்வரும் கடிதத்தை அனுப்பியுள்ளது.

தங்களின் 2005.07.27ஆம் திகதி வெளியான பத்திரிகையில் “சிறுவன் படையினரால் தடுத்து வைபபென பெறறோா கணகாணிப்பு குழுவல் முறைப்பாடு” எனும தலையங்கத்தில் பாதுகாப்பு படையை சிரமத்தில் சம்பந்தப்படுத்த எந்த ஒரு உண்மையும் இல்லாத செய்தியை வெளியிட்டுள்ளீர்கள். இப்படியான உண்மை இல்லாத செய்தியை பொறுப்பில்லாமல் பிரசுரிப்பதால், இராணுவத்தினர் போன்று பொதுமக்களும்; சிரமத்திற்குள்ளாவதாக தெரியபபடுத்துகினறோம.

அச்செய்தியில் குறிப்பிட்ட திகதியில் முகமாலை உள்ளே/வெளியே செல்லும் சோதனைச் சாவடியில் அல்லது, வாகனம் பரிசோதனை செய்யும் நிலயத்திலோ வேறு பாதுகாப்புப் படையினரின பரிசோதனை நிலயத்திலோ, பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட “கருணாகரன் சுசிகரன்” என்பவா கைது செய்யப்படவில்லை என்றும் விசாரணைக்காக நிறுத்திவைக்கவும் இல்லை என்று குறிப்பிடுகின்றோம்.

இதன் காரணமாக கடந்த 2005/07/27ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செயதியைத் திருத்தி அச்செய்திக்கு கொடுக்கப்பட்ட விளம்பரத்தை இச்செய்திக்கும் கொடுத்து தங்களின் பத்திரிகைகளில் பரசுாிதது உதவுமாறு தயவாய்க் கேடடுககொளகினறேன.

இது தொடர்பாக யாழ்.கண்காணிப்புக்குழுவுடன் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது இப்படியான ஒரு முறைப்பாடு தங்களுக்குக் கிடைத்ததை உறுதிப்படுத்தியதுடன் இது சம்பந்தமாக நடததப்பட்ட விசாரணையின் போது அத்தகைய சமபவம் எதுவும் நடத்துவதற்கான ஆதாரம் எதுவும் கிடைககவில்லை எனத் தெரிவித்தனர். 'தடுததுவைப்பென பெற்றோா முறைப்பாடு' எனபதே எமது செயதி என்பது குறிப்பிடததககது. இருப்பினும இச செய்தியால் ஏற்பட மன உளைச்சலுக்கு வருநதுகிறோம். (ஆ-ா்)

## பேராசிரியர் நந்தியின் நினைவஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீடும

(யாழ்ப்பாணம்)

மறைந்த பேராசிரியர் செ.சிவஞானசுந்தரததின் 60ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீடும் இன்று வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ற-2)

## ஆங்கிலத்தில் போட்டிகள்

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் கல்விககோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆங்கில தினப்போட்டிகள் எதிாவரும் 10, 11ஆம் திகதிகளில் நடைபெற விருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் மேற்குறித்த திகதிகளில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகளில் தரம் 3முதல் தரம் 11 வரையிலான மாணவர்கள் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-49)



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்கும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திட்டத்திற்கு அமைய பொலிகண்டி மேற்கில் நிர்மாணிக்கபபடவுள்ள வீடுகளுக்கான அடிக்கல் டயகோனி நிறுவனப் பிரதிநிதி எம்.ஜென் தலைமையில் நாட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:-பரு.நிருபர்)

# இன்று ஒரு தகவல்

## நினைவாற்றல்

கடன் கொடுத்துவிட்டு அதை மறக்காமல் நினைத்துக்கொண்டிருப்பது சகஜம். கடன் வாங்கிவிட்டு அதை அப்படியே மறந்து விடுவதும் இந்த உலகத்தில் சகஜம். 'போன மாதம் பத்து ரூபா கொடுத்தேனே அதை வாங்கிப்போக வந்தேன்' என்பான் ஒருவன். வந்தவனைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்பான் இவன். வந்தவனையே ஞாபகம் இல்லாதபோது வாங்கிய கடனா ஞாபகம் இருக்கும்? தனக்கு வேண்டாதது மனதிற்குக் கசப்பானது போன்றவற்றை மனிதன் மறந்து விடுவானாம்.

உளவியல் அறிஞர்கள் நினைவாற்றலை இரண்டு விதமாகப் பிரிக்கின்றார்கள். குறுகியகால நினைவு, நீண்டகால நினைவு. நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பொறுத்தும், நோக்கத்தைப் பொறுத்தும் அதைப் பிரிக்கின்றார்கள். இன்று பத்திரிகையில் நமது ராசிபலன் என்னவென்று பார்க்கிறோம். இதை நாம் வாழ்நாள் முழுதும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று அவசியமில்லை.

ஒரு திருக்குறள் படிக்கிறோம். அது எப்போதும் நமது நினைவில் இருக்க வேண்டும். பாடம் படிக்கும் போது ஞாபகசக்தி மிகவும் அவசியம். நினைவாற்றல் என்பது நாம் கற்கக்கூடிய தன்மையைப் பொறுத்தது என்பார்கள். இதை வளர்த்துக் கொள்ளச் சில வழி முறைகள் உள்ளன.

முதலில் படிப்பதற்கான ஆர்வம் வேண்டும். படிப்பதை, கேட்பதை, நன்கு மனதில் பதிக்க வேண்டுமென்ற ஆர்வம் வேண்டும். கவனத்தை வேறுவகையில் சிதறவிடக் கூடாது. படிக்கும் பாடத்தை மனதிற்குள் பாடமாக்கிப் பார்க்கவேண்டும். அதற்குக் கற்பனையைப் பயன்படுத்த வேண்டும். அதனால்தான் படத்துடன் பாடங்களைத் தருகின்றனர்.

படிக்கும் விடயத்தையும் மற்றவகைச் செய்திகளுடன் தொடர்புபடுத்திப் படிக்கவேண்டும். நயத்தோடு பயிலவேண்டும். இசையுடன் பயில வேண்டும். நீண்ட நாள் நினைவில் வைத்திருக்க இது நல்ல வழி. நாம் என்ன படிக்கின்றோமோ அதைப் பிரித்துப் பொருள் தெரிந்து படிக்கவேண்டும். படித்ததை மனக்கண் முன் கொண்டு வரவேண்டும். படித்தபின் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு மீண்டும் சொல்லிப் பார்க்க வேண்டும். படித்த பின்பு ஓய்வு அல்லது உறக்கம் மிக நல்லது. படித்த பின்னர்தான் உறக்கம் வரவேண்டும். படிக்கும் போதே உறக்கம் வருவது நல்லதற்கல்ல. படித்த பின்பு கடினமான வேலையில் ஈடுபடுவது நல்லதல்ல.

ஒரு புத்தகத்தை அல்லது பாடத்தைப் படிப்பதற்கு முன் அதன் உட்பொருளை அல்லது கருத்தைத் தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. பொதுவாக திரும்பத் திரும்பப் படிப்பது ஞாபகசக்தியை வளர்த்தெடுப்பதற்குச் சிறந்த வழி. அதனால் நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கு தேவை ஆர்வம், ஊக்கம், மன உறுதி. படிக்கின்ற காலத்திலேயே இந்தப் பழக்கம் வந்துவிட்டால் பின்பு மிக உதவியாக இருக்கும். இன்றைய இளைஞர்கள் தான் நாளைய தலைவர்கள். தலைவர்களாகி விட்டால் நிறையப்புள்ளி விபரங்களைக் கூறவேண்டியிருக்கும். ஞாபகசக்தி இல்லாவிட்டால் எப்படிச் சொல்வது?

ஜெனரல்ஸ் மட்ஸ் என்ற ஒருவர் தென்னாபிரிக்காவில் பிரதமராக இருந்தார். பாராளுமன்றில் பேசுவதற்கு அவருக்கு முக்கியமான புள்ளிவிபரம் தேவைப்பட்டது. மறுநாள் அதைப் பற்றிப் பேசவேண்டும். செயலாளரை அழைத்தார்." இதோ பாருங்கள்! நாளைக்கு இந்தப் புள்ளிவிபரங்கள் தேவை'' என்றார். செயலாளர் திகைத்துப்போய்விட்டார். "சார்! இந்தப் புள்ளிவிபரங்களைச் சேகரிக்க எனக்கு 5 வருடம் ஆகும்" என்றார்.

மறுநாள் பாராளுமன்றம் கூடியது. புள்ளிவிபரங்களை அள்ளி வீசி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்துவிட்டார் ஸ்மட்ஸ். பேச்சு முடிந்ததும் செயலாளர் ஓடி வந்தார். "எப்படி சார் இது? இவ்வளவு புள்ளி விபரங்களை ஒரே இரவில் எப்படிச் சேகரித்தீர்கள்?' ஆச்சரியமாக இருக்கிறதே'' என்றார். ''இந்த விபரங்களைச் சேகரிக்க அரசாங்கத்திற்கே ஐந்து வருடம் ஆகும் என்றீர்கள். அப்படியென்றால் இவை யாவும் உண்மைதானா என்று கண்டுபிடிக்க எதிர்க் கட்சிகளுக்கு பதினைந்து வருடமாகும். அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்குவதற்குள் நான் பதவி விலகிவிடுவேன்! அது தான் அடித்து விட்டேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்காததால் ஜனாதிபதி பெரும் தவறிழைத்து வருகிறார்

## பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்காது விடுவதன் மூலம் ஜனாதிபதி பெரும் தவறைச் செய்து வருகிறார். அது ஒரு முக்கியமான நிறுவனம் என்று



ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினா பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவை செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பல தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் தேர்தல ஆணைக்குழுவை நியமிப்பது என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அமைய அரசாங்கத்தின் கீழ் நிறுவப்படவேண்டிய ஒரு முக்கிய நிறுவனம் தேர்தல் ஆணைக்குழுவாகும்.

தேர்தல் ஒன்றை நடத்துவது அல்ல இன்றிருக்கும் பிரச்சினை. ஸ்திரத்தன்மை குறித்தே இன்றைய பிரச்சினை. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இருந்த ஸ்திரமான அரசாங்கத்தை அரசுத்தலைவர் சந்திரிகா தனது அதிகாரத்தைக் கொண்டு கலைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க அரசாங்கத்தை தனது தேவைக்காக கலைக்கவில்லை. ஜே.வி.பியின் அழுத்தங்கள் காரணமாகவே கலைத்தார்.

அவர் அவ்வாறு செய்திருக்கக் கூடாது.பெரும்பான்மையுள்ள அரசாங்கம் ஒன்றை அவர் அன்று கலைத்தார். சமாதான முயற்சிகள் தொடராதுவிடில் வடக்கு-கிழக்கில் அமைதி நிலவாது. நாடு நெருக்கடியான ஒரு நிலைக்கு முகம் கொடுத்துள்ளது. அரசியல்வாதிகளால் மாத்திரமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது பொதுமக்களும் அதற்கென அரசியல் வாதிகளுக்கு உதவவேண்டும் என்றும ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ற-4)

# எதிர்வரும் டிச. 22ற்குப் பின்னர் சந்திரிகாவை ஒருபோதும் ஜனாதிபதியாக ஏற்க மாட்டோம்

## -ஐ.தே.க. பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்ட அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது சட்டவிரோதமானதாகும். பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்ட இன்றைய அரசாங்கத்தில் பிரதமர் பதவி வகிப்பது சட்ட விரோதமானதும் ஜனநாயக விரோதமானதுமாகும். இவ்வாறு கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க.கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

குண்டகசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிர்வாக சபை ஒன்றியத்தின் கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் அதனைத் தெரிவித்தார்.

இவ்வாண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு மேல் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பணடாரநாயக்க குமாரதுங்கவிற்கு ஜனாதிபதி பதவியை வகிக்க முடியாது. இதுவே, நமது அரசியல் சட்டமாகும்.எதிர்வரும் டிசம்பர் 22ஆம் திகதிக்கு முன்பு ஜனாதிபதி தேர்தல் நடைபெறாவிட்டால் எதிர்வரும் டிசம்பர் 22ஆம் திகதி முதல் இன்றைய ஜனாதிபதியை நாட்டின் ஜனாதிபதியாக நாம் ஏற்றுக கொள்ளமாட்டோம்.

நாட்டு மக்கள் அனைவரும் கிளர்ந்தெழுந்து வீதியில் இறங்கி அரசின் ஜனநாயக விரோதப் போக்கிற்கு எதிராகப் போராடுவார்கள். 6வருடத்திற்கு ஒரு முறை ஜனாதிபதித்தேர்தல் நடைபெற வேண்டும் என்ற நமது அரசியல் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட எமது கட்சி அனுமதிக்காது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அரசியல் சட்ட வியாக்கியானத்தைப்பெறும் பொருட்டு அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிய முடிவினை அறிவிக்கும் முழுச்சுதந்திரத்தையும் தன்னகத்தே கொணடுள்ள தேர்தல் ஆணையாளருக்கு அழுததம கொடுக்கும் நோக்கில அமையும் எத்தகைய செயறபாட்டையும் இந் நாட்டு மக்கள் அனுமதிக்க மாடடார்கள்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிததேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆதரவோடு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எமது கட்சியின் மக்கள் சக்திப்போராட்டமே அரசாங்கம் சார்பான ஜனாதிபதி வேட்பாளராக மஹிநத ராஜபக்ஷ நியமிக்கப்படுவதற்கு காரணமாகும். இது நமக்குக் கிடைத்த முதலாவது வெற்றியாகும்.

ஜனாதிபதித் தேர்தலையே நடத்துவதில்லை என்றவர்கள் இனறு ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுத்துள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# அடுத்த ஆண்டு நான் பிரதமராவேன்!

## —அமைச்சர் அனுரா தெரிவிப்பு—

(கொழும்பு)

நாட்டுக்காகத் தியாகங்களைச் செய்தவர்களும் செய்பவர்களுமே எமது கட்சியில் உள்ளனர் என உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜனாதிபதி சந்திகா அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவரது பன்னிரண்டு வருட ஆட்சிக்காலத்தில் நாடு விரிவாக அபிவிருத்தி அடைந்துள்ளது. முன்னேறியுள்ளது. அரசுத் தலைவர் வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்து கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் அரசாங்கம் இருப்பதாகக் கடந்த காலங்களில் ஊடகங்கள் தெரிவித்துவந்தன.

எமக்கு எந்தவிதமான இக்கட்டும் இல்லை. நான் வேட்பாளர் பதவியை தியாகம் செய்தேன்.எனது தந்தையும் பிரதமர் மஹிந்தவின் தந்தையும் இணைந்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்கள்.

நாம் அரசியல் வாழ்வில் பல போராட்டங்களை நடத்தியே வெற்றிகளைப் பெற்றுள்ளோம். எதிர் காலத்திலும் அவ்வாறே செய்வோம்.

நாட்டிற்காக தியாகங்களை செய்தவர்களும் செய்யத்தயாராக இருப்பவர்களுமே எமது கட்சியில் உள்ளனர். ரணில் நாட்டிற்காக என்ன தியாகம் செய்துள்ளார் எனக் கேட்கவிரும்புகிறோம். அதற்கு ஒரு பதிலும் இல்லை.

அத்தனகல்ல பண்டாரநாயக்க குடும்பத்தை ஆட்சி ஏற்றிய தொகுதி. எனது தாய்,தந்தை இருவரும் இன்நாட்டு பிரதமர்களாக இருந்துள் ள்னர். எனது சகோதரி ஜனாதிபதியாக இருக்கிறார். அடுத்த ஆண்டு நான் பிரதமராகும் வாய்ப்பு கிடைக்கும். உலகில் எந்த ஒரு நாட்டிலும் இந்த நிலை இல்லை எனவும் அமைச்சர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

பொறாமை கொண்டவர்கள் எமது ஜனாதிபதி வேட்பாளர் மீது சேறு பூசுகின்றனர். எனக்குப் பூசும் சேறு என் மீது விழாது. எனது 30 வருட அரசியல் வாழ்வில் நான் ஒருபோதும் காவல் நிலையம் சென்றதில்லை. அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறும் தேர்தலில் எமது வேட்பாளர் வெற்றி பெறுவார். அதனைத் தடுக்க எவராலும் முடியாது என்றும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார். (4)

# ஐ.நா. தலைமைப் பதவி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால, ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பதவிக்கு விண்ணப்பித்து அதற்கான ஆதரவைப் பெறுகையில்,பாகிஸ்தான் அதற்கு ஆதரவளிக்காது எனத் தெரிவித்துள்ளது.

நிரந்தர உறுப்புரிமை கோரி, மேலும் ஒரு சில நாடுகளுடன் இணைந்து இந்தியா ஆதரவு நாடுகளை திரட்டி வரும் நிலையில் ஸ்ரீலங்காவும் இந்தியாவுக்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளது.

இதையடுத்தே பாகிஸ்தான் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகக் கருதப்படுகிறது. (து)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

45 பேராசிரியர் லெனினுடனான கலந்துரையாடலை முடித்துக் கொண்ட போது நேரம் நள்ளிரவைத்தாண்டியதால் அனைவரும் உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டனர்.

உள்ளகப் பயிற்சிக்காலமும் நெருங்கிக்கொள்வதால் சென்னை மாநகரை அண்மித்துள்ள ஆலயங்களையாவது பார்க்க வேண்டுமென ஏற்கனவே தீர்மானித்திருந்தோம்.


பெஷன் நகரிலுள்ள அஷ்ட லக்ஷ்மி கோயில் கடலோரமாக அமைந்துள்ளது.

லஷ்மிக்கு தனித்துக்கோயில் அமைக்கப்படுவது அரிதான விடயம்.

ஆனால், பெஷன் நகரில் அஷ்டலக்ஷ்மிகளையும், ஓரே பீடத்தைக்கொண்ட கோபுரத்தின் கீழ் அமைத திருப்பது அதிசயமான தொன்றே.

கோயிலின் நுழைவாயிலில் ஆலய பரிபாலனத்தின் கீழ் இயங்கும் டலக்ஷ்மிகளும் கருங்கற்களால் தெய்வீகப்பொலிவுடன் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்று ஒருகணம் மெய்மறந்து போனேன்.

அதைச் சுருக்கமாகக் கூறின் முருகப்பெருமானின் திருபெருவடிவத்தைக் கண்ட சூரபன்மன் எவ்வாறு ஒடுங்கி நின்றானோ! அதேபோல் என்மனமும் பரந்தாமனின் துணையுடையாள் திருப்பாதங்கண்டு ஒடுங்கியதென்றே கூறவேண்டும்.



ஒரே கோபுரத்தின் கீழ் அஷ்டலக்ஷ்மி

## அலை கடலோரம் அமைந்த அஷ்டலட்சுமி ஆலயம்

அதன் பிரகாரம், மறுநாள் காலை எழுந்ததும், ஆலயங்களுக்கு செல்லத்தயாரானோம்.

### அஷ்டலக்ஷ்மி கோயில்

சென்னை மாநகரை அண்மித்த பெஷன் நகரில் உள்ள அஷ்ட லக்ஷ்மி கோயிலையும், ஆறுபடைகளையும் ஒன்றாக்கி அமைக்கப் பட்டுள்ள ஆறு படை முருகன் ஆலயத்திற்கும் செல்வதென முடிவெடுத்துக்கொண்டோம்.

சிறிய வர்த்தக நிலையம் ஒன்று காட்சி தந்தது. அருகே குடிநீர்த் தொட்டி.

உயர்ந்த கோபுரத்தின் கீழ் எட்டுத்தளங்களாக பிரிக்கப்பட்டு அஷ்டலக்ஷ்மிகளையும் பிரதிஷ்டைசெய்துள்ளார்கள.

தனலக்ஷமி, தானியலகஷமி, சந்தானலக்ஷ்மி, சௌபாக்கிய லக்ஷ்மி, வரலக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, வீரலக்ஷ்மி என்ற அஷ்

ஆலயத்தின் படிகளில் ஏறிச் செல்லும் பாதைகள் ஒடுக்கமானவையாயினும், அவை ஒழுங்கானவை.

அந்தப் படி வழியே ஏறியபோது அந்தண சிவாச்சாரியர் நெய்த் தீபம் காட்டும் காட்சியை கண் குளிரக்கண்டோம்.

ஆலயத்தின் அமைப்பை என்னால் வர்ணிக்கமுடியாதாயினும் ஒருமுறை மட்டும் சென்றுவிட்டு

அஷ்டலக்ஷ்மி கோயிலின் உள்ளமைப்பை நான் மட்டுமல்ல, எவராலுமே கூறிவிட முடியாதென்பது எனது அபிப்பிராயம்.

ஆலயத்தைச் சுற்றி வருகின்ற போது பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள எட்டு லக்ஷ்மிகளையும் வழபாடு செய்யக்கூடியதாக ஆலய அமைப்பு உள்ளது.

அஷ்டலக்ஷ்மிக்கும் எட்டுச் சிவாச்சாரியர்கள் நின்று பூசை செய்யும் காட்சி கண்ணுக்கு இனியது.

ஆலயத்தின் மேற்பீடத்தில் நின்று கிழக்கே பார்த்தபோது நித்தமும் அலையோசை ஒலிக்கும் நீலக்கடல் என்னே அழகு! பாற்கடல் துயிலும் பரந்தாமனை நோக்கி அவன் துணையாள காத்திருப்பது போன்ற நினைப்பு என்னுள்ளத்தில் எழுந்துகொள்ள கன்னத்தின் ஓரங்கள் ஆனந்தக்கண்ணீரால் நனைந்தன.

எத்தனை அழகு! வைகுண்டத்தின் வடிவழகும் இப்படியன்றோ!... என்கற்பனை பிரபஞ்சம் கடந்து நின்ற வேளை, எம மோடு வந்தவரின் கரம் என்தோழில் பட, அஷ்டலக்ஷ்மி கோயிலில் இருந்து படிவழியே இறங்கினோம்.

ஏற்கனவே நான் கூறிய அந்த சிறிய கடையில் அஷ்டலக்ஷ்மி

**என்.விஜயன்**

தோத்திரப் பாமாலை, வெள்ளெருக்கு வேரில் வடிவமைக்கப் பட்ட கணபதி, லக்ஷமி கடாச்ச மந்திரம் அடங்கிய செப்புத்தகடு இப்படி இன்னோரன்ன பொருட்கள் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்தன.

நம்மோடு வந்தவர்கள் கடையில் சிலநேரம் செலவழித்த பின்னர் ஆலயத்தின் வெளிவாயிலை கடந்தனர். வெளியே மோர், கூடவே சேலம்மாங்காய். விற்பனைகள் தடல் புடலாக நடந்தன.

ஏற்கனவே மாமல்லவ புரத்தில் மோர் குடித்த அனுபவம் இருந்தமையால் அஷ்டலக்ஷ்மி கோயிலில் மோர் குடிக்கும் விடயத்தில் மிக ந'தான மாக நடந்து கொண்டோம். (வளரும்)

---

## செல்வச்சந்நிதியில் சிறப்பு நிகழ்வுகள்

(மருதங்கேணி)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுகள் வருமாறு.

5ஆம் திகதி பஜனை வழங்குபவர்கள் சாயிமன்றம் (வடபிராந்திய சாயி சமித்திகள்),6ஆம் திகதி சொற்பொழிவு 'கந்தபுராண கலாசாரம்' வழங்குபவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், 7ஆம் திகதி சொற்பொழிவு 'மீளாஅடிமை' விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி, 8ஆம் திகதி சொற்பொழிவு 'சிவகதி தானே' வழங்குபவர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், 9ஆம் திகதி சொற்பொழிவு 'காவடிக்கந்தன்' வழங்குபவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி (எம்.ஏ), 10ஆம் திகதி சொற்பொழிவு 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' வழங்குபவர் ச.லலீசன், 12ஆம் திகதி சொற்பொழிவு 'சைவமும் தமிழும்' வழங்குபவர் செஞ்சொற்செல்வர்' செல்வவடிவேல், 13ஆம் திகதி சொற்பொழிவு 'பெரியபுராணம்' வழங்குபவர் அ.குமாரவேல், 14ஆம் திகதி சொற்பொழிவு 'முருகன் பெருமை'வழங்குபவர் காரை.கு.சிவராஜசர்மா, 15ஆம் திகதி சொற்பொழிவு 'அருள்வாய் குகனே' வழங்குபவர் ஆ.சிவநாதன், 16ஆம்திகதி சொற்பொழிவு 'ஐம்புலனை வென்றவர்' வழங்குபவர் சிவத்திரு வ.குமாரசாமி ஐயர். (அ-35)

---

## சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரும் கட்சிக்கே ஆதரவு

### மலையகமக்கள் முன்னணித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரும் கட்சிக்கு ஜனாதிபதித்தேர்தலில் ஆதரவு வழங்கப்போவதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

சிறுபான்மை மக்களின் வாக்குகள் இன்றி எந்தவொரு கட்சியும் ஜனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதால்,மலையக சிறுபான்மை மக்களின் மாற்றத்திற்கான திட்டங்களை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கும் கட்சியையே தமது கட்சி ஆதரிக்குமென்று அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மஷ்கெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவையோ அல்லது மகிந்தராஜபக்ஷவையோ கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க முடியாது என்றும் அவர்கள் மலையக மக்களின் நன்மை கருதி எத்தகைய திட்டங்களை முன்வைக்கப் போகின்றார்கள் என்பதனை பகிரங்கமாக தெளிவுபடுத்த வேண்டும் எனவும் மலையகமக்கள் முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# பிதிர்க்கடன் நிறைவேற்றும் ஆடி அமாவாசை விரதம்

மாதந்தோறும் வரும அமாவாசையும், பௌர்ணமியும் எமது பிதா வழியினரையும், மாதா வழியினரையும் மனத்தில் இருததி விரதங்கள், தர்ப்பணங்கள், வழிபாடுகள் செயயும புனித நாடகளாக எம முன்னோர்களால் வகுக்கப்பட்டுள்ளன. எனினும அவற்றில் ஆடி அமாவாசை பிதிர்த தர்பபணத்திறகு மிகவும் சிறந்ததாகும்.

கிரகங்களில் சூரியனை பிதா எனவும், சந்திரனை மாதா எனவும் நினைத்து வழிபடுவது இந்துக்களின் வழக்கம். சூரியனை வடதிசை நோக்கும் தைமாதத்தில் வரும் அமாவாசையும், சூரியன் தென்திசை நோக்கிச் செல்லும் ஆடிமாதத்தில் வரும் அமாவாசையும் பிதிர்க்கடன் செய்து பிதாவை வழிபடுவதற்குச் சிறந்த நாட்களாகப் போற்றப்படுகின்றன.

**பிதிர் தர்ப்பணம**

தென்புலததார் எனப்படும் எமது முன்னோராகிய பிதிரர்களை நன்றியுடன் வழிபடடுப பிதிர்க்கடன் செய்வதும், அதனைச் சிரத்தையுடன் சிரார்த்தமாகச் செய்வதும் நம் மூதாதையர்களுக்கு நாம் செயயும் நனறிக் கடனாகும்.துஷ்ட தேவதைகளுக்குப் பரம எதிரியான மகாவிஷ்ணுவின் உடம்பிலருந்து உண்டான காரெள்ளும், தாபையும் கொண்டு தர்ப்பணம் செய்து எள்ளும், தண்ணீரும் இறைத்து பிதிர்களை வழிபடுவதும், தானதாம வழிபாடுபாடுகளைச் செய்வதும் ஆடி அமாவாசை நாளின் முக்கிய கடமையாகும்.

பிதிர்க்கடன்களை பக்தி சிரததையுடன் செய்வதால் வாழ் வில் நல்ல சநததியும், செல்வம், கர்த்தி, ஞானம் ஆகிய சிறப் புக்களும் வந்துசேரும். இல்லை யேல் பிதிர் சாபத்தினாற் பலவேறு துன்பங்களும், இழப்புக்களும் ஏற்படும்.

**புனித தீர்த்தங்களா**

அமாவாசை பௌர்ணமித் தினங்களில் கடலில் நீராடுதல் மிகவும் நலலது. பிதிர்களை எண்ணி அவர்களது பாவத்தைப் போக்கி அவர்களுககு முததியளிககும் வணணம் இறைவனை வேண்டி நீராட வேணடும.ஆடி அமாவாசையன்று பிதிர்க கடன்ளைத தாக்க வடக்கே கீரிமலை போன்று கிழக்கே பதிர்க கடன் தீர்க்கும் புண்ணிய தலமாக அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில் கணிக்கப்படுகிறது. இந்தியாவில் இராமேஸ்வரம், கங்கை,யமுனை,சரஸ்வதி, தாமிரபரணி போன்ற புனித தீர்த்தங்களும் பிதிர்க்கடன் தீர்க்கும் இடமாக விளங்குகின்றன.

**தீபா**

பக்தி சிரத்தையுடனும் நியமங்களுடனும் பிதிர்க்கடன்களினால் அவரவர்களுடைய குலஙகள தழைத தோஙகவும், பிதிர் சாபங்களிலிருந்து விடுபட்டு நற்கதியடையவும் முடியும். எனவே ஆடி அமாவாசைத தினத்தில் நாமும் நம மூதாதையர்களுக்கு பிதிர்க்கடன் வழிபாடுகள் செய்து வாழவில் சகல செளபாக்கியஙகளும் பெறறு வாழவோம்.

# செய்தித் துளிகள்

## வர்த்தக ஊழியர்களுக்கு ஆடி அமாவாசை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினமான இன்று வியாழககிழமை சகல வர்த்தக நிலையங்களையும் பூடடி வர்த்தக ஊழியர்கள் ஆடி அமாவாசைக் கடமைகளை செய்வதற்கு விடுமுறை வழங்க வேண்டுமென யாழ்.வணிகர் கழக நிர்வாகசபை தீர்மானித்துள்ளதாக மேற்படி கழகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் செயறபடுவார்கள் என எதிர்பார்க் கப்படுகிறது. (து)

## ஆடி அமாவாசை

இனறு வியாழக்கிழமை பிதிராகளுக்குரியதாகிய ஆடி அமாவாசை தினத்தில் நகுலேஸ்வர தீர்த்தக்கரையில் இருக்கும் குருமாரிடம் சங்கற்பம் செய்து தீர்த்தமாடி பிதிர்களுக்குத் தில தர்ப்பணம் (எள்ளுந் தண்ணீரும் இறைத்தல்) செய்யலாம்.

அதன்பின் நகுலேஸ்வர சந்நிதானத்துக்கு நெய்த்தீபம் (மோட்சதீபம்) ஏற்றி அர்ச்சனை வழிபாடுகள் செய்து தத்தமது முன்னோர் நற்கதியடையப் பிரார்த்திககலாம். நெய்த்தீபம், பூசைப் பொருடகளை நகுலேஸ்வர ஆலய முன்றலில் பெறறுககொள்ளலாம. காலை 7.00 மணிமுதல் பி.ப.4.00 மணிவரை தெல்லிப்பழை சேந்தாங்குளம் ஆகிய இரு வழிகளாலும் போக்குவரத்து வசதி செய்யபபடடுளளது. நகுலேஸ்வரத்தில் அடியார்களுக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும் என கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ராஜராஜஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருககள் தெரிவிததுள்ளார். (அ)

## புதிய அலுவலகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு புனாவாழவு புனரமைப்பு நிறுவனத்திற்கு மருதங்கேணியில் அலுவலகம் ஒன்று அண்மையில் திறககபபட்டுளளது.

இந்த அலுவலகத்தில் கேட்போர் கூடம், கணனி பயிற்சிநிலையம், தையல் பயிற்சி நிலையம் என்பன அடங்கும். இத் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நிறுவனத்தின் தலைவர் சி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறறது.

இக்கட்டடம் மணற்காடு குடத்தனைப் பகுதி மணல் விநியோகத்தினால் பெறப்பட்ட நிதியிலிருந்து அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (து-35)

## சுற்றாடல் உத்தியோகத்தர்

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மறறும உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தலா ஒருவர் என்ற வீதத்தில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இதுவரை காலமும் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் மட்டுமே மேற்படி உத்தியோகத்தர்கள் பணிபுரிந்து வந்தனர். தற்போது ஏனைய செயலகங்களுக்கும் சுற்றாடல் உத்தியோகத்தர்கள நியமிககபபட்டுள்ளனர்.

நியமனம் பெறும் சுற்றாடல் உத்தியோகத்தர்கள் பிரதேசங்களில் காணப்படும் பௌதீக வளங்கள் குறித்த முகாமைத்துவம் தொடர்பாகக கண்காணித்தல், கிராமியம் மறறும பாடசாலைகளில் சுற்றாடல் குழுக்களை அமைத்துச் செயற்படுத்துதல் உட்படப் பல பணிகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளனர். (அ-49)

## நாய்கடித்து காயம்

(ஊர்காவற்றுறை)

அண்மைக் காலமாக ஊர்காவற்றுறைப் பகுதியில் நாய்கடிக்கு உள்ளானோர் தொகை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் தம்பாட்டியைச் சேர்ந்த ச.அழகு என்பவர் நாய்கடித்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகினறார். (து)

## உள்ளூராட்சி வாரம்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பாகக் கொண்டாடு முகமாக சாவகச்சேரி நகரசபையால் நகர் எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவாகளிடையே பிரிவு ரீதியாக பொதுஅறிவு; கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இம்மாதம் 16ஆம் திகதி செவ்வாய்ககிழமை இதற்கான பரீடசைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பாடவிடயங்கள், தலைப்புக்களில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான முன் ஆயதத வேலைகளில் நகரசபை ஈடுபட்டுள்ளது. மாணவர்கள் தமமை தயாரபடுத்திக் கொள்ளுமாறு தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ-21)

## கஸ்தூரியார் வீதியில் களவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 30ஆம் திகதி பூட்டப்பட்டிருந்த நகைக்கடையின் கூரையைப் பிரித்து இறங்கிய கள்வர்கள் அங்கிருந்த தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் கற்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

சுப்பிரமணியம் இராசையா என்பவருக்குச் சொந்தமான கஸ்தூரியார் வீதி இலக்கம் 280 இல் அமைந்துள்ள கஜலஷ்மி நகைப் பூங்காவிலேயே இவ்வாறு நகைகள் திருட்டுப் போயுள்ளது. யாழ்ப்பாணப் பொலிஸார் கள்வரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கபபட்டுள்ளது. (அ)

## திருவிழாவுக்குச் செல்ல படையினர் அனுமதி

(மருதங்கேணி)

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள வசாவிளான் புனித யாகப்பர் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா அண்மையில் நடைபெற்றது.

இத்திருவிழாவில் பெரும் தொகையான கத்தோலிக்க மக்கள் கலந்துகொண்டனர். இவர்களுக்கு படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

அச்சுவேலி சீர்திருத்த பாடசாலை வரை பஸவண்டியில் சென்றவர்களைப் படையினர் அங்கிருந்து வாகனங்களில் தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றனர்.

யாகப்பர் தேவாலயத்தில் அருட்திரு ஜோதிநாதன் அடிகளாா திருப்பலியை ஒபபுககொடுத்து திருவிழாவை சிறப்பாக நிறைவேற்றி வைத்தார். (து-35)

## வடமராட்சிப் பகுதியில் இரு குளங்கள புனரமைப்பு

வடமராட்சியில் நியாப் I திட்டத்தின் கீழ் இரு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

வடமராட்சி அத்தாய் கிராமத்தில் கொந்திராய்க் குளமும் துன்னாலை மேற்கில் தாமரைக் குளமும் புனரமைப்புச் செய்து கையளிககப்படட குளங்களாகும். இவை நீர்ப்பாசனத் திணைககளத்தினால் புனரமைப்புச் செய்யப்படடு நியாப் திட்ட பணிப்பாளரினால் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனிடம் கையளிக்கப்பட்டு பின் அவரால் தலைமைககாரியால பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரனிடம் கையளிக்கபபட்டு பின் அவரால் கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டது. இவ்வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (து-35)

## இடமாற்றம்

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய நீதிபதி பா.சுப்பிரமணியம் நேற்று முன்தினம் முதல் ஊர்காவற்றுறை மாவட்ட நதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார்.

இதுவரை ஊர்காவற்றுறை நீதிபதியாகப் பணியாற்றிய நீதிபதி ஏ.பிரேம்சங்கர் சாவகச்சேரிக்கு இடம் மாற்றம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-52)

# பிள்ளைகள் மீது பெற்றோர் காட்டும் ஆர்வம் தொடர வேண்டும்

## விளையாட்டுப் போட்டியில் டாக்டர் சோதிமயம் விளக்கம்

மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, கலவி என்பனவறறில பெறறோர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அதன் மூலமே பிள்ளைகள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக விளங்க முடியும்.

இவ்வாறு வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலநதுகொண்டு உரையாற்றிய வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.சோதிமயம் தெரிவித்தார். கே.என்.தேவதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வைத்திய கலாநிதி சோதிமயம் மேலும் கூறியதாவது,

பிள்ளைகள் பாலர் பாடசாலையில் கற்கும்போது பெற்றோர்கள் பிள்ளைகள் மீது காட்டும் ஆர்வத்தை பிள்ளைகள் பாலர்பாடசாலையை விட்டு வெளியேறி அரசினர் பாடசாலையில் சேர்ந்தவுடன் காட்டுவதிலலை. இது ஆரோககியமானதல்ல.

பிள்ளைகள் பாலர் பாடசாலையில் கற்கும்போது அவர்களின் கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவறறில் பெறறோர்கள் காட்டும் ஆர்வத்தை அவர்கள் வளர்ந்துகொண்டிருக்கும்போது தொடர்ந்து காட்டுவதில்லை.

பெற்றோர்கள் காட்டும் ஆர்வமே பிள்ளைகளின் வளர்ச்சி, எதிர்கால வாழ்க்கை என்பனவற்றைத் தீர்மானிக்கும். ஒவ்வொரு பிள்ளைகளினதும் நலனிலும் பெற்றோர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அபபோதுதான் பிளளைகள் நறபிரஜைகளாக வளர முடியும். (து-35)

# வடமராட்சி பிரதேச செயலகத்தின் உப பணிமனை வல்வெட்டித்துறையில் இயங்கவைக்க நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் உப பணிமனை இம்மாதம் முதல் மீண்டும் வல்வெட்டித்துறையில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரலை காரணமாக இயஙகாது இருந்துவந்த உப பணிமனை மீண்டும் இயங்குவதற்கான நடவடிக்கையில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.

இவ் உப பணிமனை திறக்கப்பட்டால் தொண்டைமனாறு, கெருடாவில், வல்வெட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய கிராம மக்கள் தமது தேவைகளை இலகுவில் பூர்த்திசெய்யக் கூடியதாக இருக்கும். இதனால் பருத்தித்துறைக்கு சென்றே தமது கருமங்களைக் கவனிக்க வேண்டிய நிலையையும் பணச்செலவு மற்றும் போக்குவரத்துக் கஷ்டம், காலத்தை வீணாக்குதல் போன்றவற்றையும் தவிர்க்க முடியும் எனவும் தெரிவக்கப்படுகறது. (து-35)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

(மருதங்கேணி)

பருத்தித்துறை கல்லூரி வீதியிலிருந்து எரிஞ்ச அமமன் கோவில வீதிவரை நீண்டகாலமாக திருத்தப்படாமையால் மிக மோசமாக பழுதடைந்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வழியாக வல்வெட்டித்துறைக்கு செல்லும் வீதி உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மூடப்பட்டதனால் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சககோட்டை, இன்பருட்டி, வியாபாரிமூலை ஆகிய கிராமங்களிலுள்ளவர்கள் பருத்தித்துறை நகருக்கு வருவதனால் எரிஞ்ச அம்மன் கோவில் வீதி ஊடாகவே வரவேண்டும. இவ்வீதியை சம்பந்தப்பட்டவர்கள உடனடியாக திருத்தித்தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-35)

## கள்ளின் விலை அதிகரிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தால் கள்ளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு போத்தல் பனங்கள்ளின் விலை 25 ரூபாவாகவும தென்னங்கள்ளின் விலை 30 ரூபாவாகவும் கடந்த முதலாம் திகதியிலிருந்து விற்கப்பட்டு வருகின்றது. (து)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்ட கொடிவார ஆரம்ப விழாவில் யாழ். சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் பருத்தித்துறை பிரபல வர்த்தகர் என்.பத்மநாதனுக்கு கொடியினை அணிவிப்பதைப் படத்தில் காண்க.
(படம்:-அ.கணபதிப்பிள்ளை)

# முன்னேறுவோம்

மற்றவர்கள் நம்மை மதிக்க வேண்டும். நமக்கு நிறைய நண்பர்கள் வேண்டும். அனைத்து வசதிகளையும் அமைத்துக்



கொளள வேண்டும்... இது போன்ற ஆசைகளை நாம் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

பண வசதி படைத்தவர்களுக்கு இவற்றை அடைவது கடினமல்ல. ஆனால், காலையில் எழுந்து இரவில் படுக்கும் வரை பல பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நாம் வசதியாக வாழ்வதும் முன்னேறுவதும் எப்படி? சிரமம்தான்.. ஆனால், சாத்தியமே...

நிறையப் பணம் வைத்துக் கொண்டு ஓயாமல் செலவு செய்பவர்கள் பணக்காரர்கள் அல்ல; கிடைக்கும் பணத்தை நன்முறையில் செலவிட்டு அதிலும் சேமித்து வைப்பவன்தான் பணக்காரன். ஒரே நாளில் பணக்காரராக முடியாது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளைப் பின்பற்றி வந்தால் நாமும் பணக்காரர்களாக வாழ முடியும்.

உன்னில் பிறந்து உன்னில் வளரும் என்னை உயர வைப்பாயாக. அரசன் ஆனாலும் சரி; ஆண்டியானாலும் சரி நான என்று சொல்வது இந்த ஒரு உடலைத்தான். உடலில் உயிர் இருக்கும் வரைதான் இந்த ஆடல், பாடல், ஏழை, பணக்காரன் எல்லாம். உடலை ஆரோக்கியமாகவும் அழகாகவும் பாதுகாக்க வேண்டியது நம்முதல் வேலையாகும்.

ஓர் உயரக் கண்ணாடி முன் நின்று நம்மை நாம் பார்த்து யோசிக்கவேண்டும். இதே உருவில் இன்னொருவரைப் பார்த்தால் நாம் என்ன நினைப்போம்? கண்ணுக்கு நீங்கள் பணக்காரராகத் தெரிகிறீர்களா? நல்லவரா? அன்பு நிறைந்தவரா? எல்லாக் கோணங்களிலும் சிந்திக்க வேண்டும். தலை முடி சீராக இருக்கிறதா? முகம் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறதா என்று தலை

## முன்னேற்றுவோம்...

முதல் பாதம் வரை கவனிக்க வேண்டும். இன்று என் உடலுக்குப் போதுமான உணவு, ஓய்வு, உடற்பயிற்சி எல்லாம் தந்தேனா? என்னைப் பார்ப்பவர்களுக்கு உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் காட்சி அளிக்க என்னால் முடியும் என்று நினைக்க வேண்டும்.

### ஆள் பாதி ஆடை பாதி

நல்ல தரமான ஆடைகளை வாங்க வேண்டும். மலிவு விற்பனையின் போது வாங்கினால் சாமர்த்தியம். எல்லா நிறங்களும் எல்லாவித ஆடைகளும் நமக்குப் பொருத்தமாகி விடாது. நம் அழகை தூக்கக் கொடுக்கும் உடைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு நண்பர்களின் உதவி அவசியம். நம் சோம்பலை ஆடைகளில் காட்டக்கூடாது. வீட்டில் இருந்தாலும் சரி, வேலைக்குச் சென்றாலும் சரி எளிமையான அலங்காரம்செய்து கொள்ள வேண்டும்.

எளிமையாகவே நான் அழகு. எனக்கு அலங்காரம் தேவையில்லை என்கிறீர்களா? அழகே உருவான அம்பிகையையே அலங்கரித்துத்தான் வணங்குகன்றோம். நாம் மட்டும் எம்மாத்த்ரம்? மேலும் அழகு தன்னம்பிக்கையை வளர்க்கும். கூந்தலில் சொருகும் பின் முதல் காலணிவரை பொருத்தமானவற்றை அணிய வேண்டும்.

### பழையதைப் போக்கி புதியதைச் சேர்ப்போம்

நம் சுற்றத்தைக் கவனிக்க வேண்டும். எமது குடும்பத்தார் அழகாகவும் சீராகவும் இருக்க உதவ வேண்டும். குழந்தைகளுககுச் சிறு வயதிலிருந்தே உடல், உடை பராமரிப்பைச் சொல்லிக் கொடுத்து வந்தால் நல்லது.

அடுத்தபடியாக அவசர அவசரமாக கடன் வாங்கி வீட்டையும் புதுப்புது பொருட்களை வாங்க வேண்டாம். வீட்டை அலங்கரிப்பது எப்படி என்ற புத்தகங்களையும் படங்களையும் பாருங்கள். நண்பர்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். படிப்படியாக ஒவ்வொரு அறை யாக மாற்றம் செய்து வாருங்கள். இவ்வாறு செய்து வந்தால், தேவைப்படுகின்ற, தேவைப்படாத பொருட்கள் எவை? பழுது பார்க்கப்பட வேண்டியவை எவை என்ற பல விஷயங்கள் புலப்படும். இதனால் நம் வீடு கவர்ச்சியாகத் தோற்றமளிப்பது மட்டுமல்லாமல் நாம் செலவையும் மிச்சப்படுத்தலாம். நாளடைவில், அழகான பெருமைக்குரிய வீட்டிற்கும் சொந்தக்காரர் ஆகி விடுவீர்கள்.

### பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளல்

நிறையப் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டும். நன்முறையில் அனைவரோடும் பழக வேண்டும். நல்லவர்கள் எப்படிப் பழகுகிறார்கள் என்று கவனித்து பின்பற்ற வேண்டும்.

அழகாக வந்திருப்பவர்கள் எப்படி உடுத்துகிறார்கள் என்று கவனியுங்கள். சிறுகச் சிறுக நீங்களும் அந்தத் தரமான அடை ஆபரணங்களை வாங்கலாம். பணக்காரர்களைக் கவனித்து அவர்களின் நற் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுங்கள்.

கடந்த காலத்தை மாற்ற முடியாது. இனி வரும் காலத்தை எண்ணுவோம். நாம் தான் சமுதாயம். ஒவ்வொருவரும் தன் நிலை உயரப் பாடுபட்டால், நம் சமுதாயமும் முன்னேறும்.

# மார்பக புற்றுநோய்

பெண்களை அதிகளவில் பாதிக்கும் நோய்களுள் ஒன்று மார்பகப புற்றுநோய்.

மார்பகப் புற்றுநோய் என்பது மார்பகத்தில் உள்ள செல்கள் கட்டுப்பாடின்றி வளர்வதால் ஏற்படுவதாகும். உடலின் மற்றப் பகுதியைப் போலவே, மார்பகத்திலும் செல்கள் வளர்ச்சியடையும்.

ஜீன்களில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், செல்கள் வளர்ச்சியிலும் அது பாதிப்பை ஏற்படுத்தும்.

மார்பகத்தில் கட்டி, அல்லது மார்பகத்தின் அருகே அல்லது சுற்றி தடித்த சருமம் காணப்படும். அல்லது கையின் கீழ்ப்புறம் நகர்த்த முடியாமலும், வலியுடன் அல்லது வலியின்றி இருக்கும்.

மார்பக் காம்பு உற்புறம் வளைந்து அல்லது கறுத்த திரவம் வெளிவரும்.

மார்பகத்தின் அளவு அல்லது வடிவம் மாறுபட்டு இருக்கும். சரும எரிச்சல் அல்லது மார்பக காம்பில் வலி, மார்பகம் முழுவதும் அல்லது ஒரு பகுதியில் செதில் செதிலான தோற்றம், அல்சர் போன்றவையும் அறிகுறிகளாகும்.

இத்தகைய அறிகுறிகளில் ஏதேனும் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை அணுகி உரிய சிகிச்சையை மேற்கொண்டால் மார்பகப் புற்றுநோயிலிருந்து முற்றாக விடுபடலாம்.

# மகளிர் உலகம்



## நகங்கள் நலமா?



நல்ல நகங்கள் இல்லாமல் விரல்களின் அழகு முழுமை பெறாது. நகங்களை நல்ல முறையில் பராமரித்தால், நகங்களின் அழகை மட்டுமன்றி உடலின் ஆரோக்கியத்தையும் பேணி விடமுடியும். நகம் வளர்ந்துகொண்டே இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்.

தோலுடன் சேர்ந்திருக்கும் நகத்தின் பின்பாகமே வளர்கிறது. இந்த நகங்களின் வளர்ச்சி உடலுக்குத் தக்கபடி மாறும் என்பது குறிப்பிடத்தக்கது.

நீளமான விரல்களைக் கொண்டவர்களுக்கு நகத்தின் வளர்ச்சி விரைவாக இருக்கும். அதுபோல உயரமானவர்களுக்கு நகங்களின வளர்ச்சி அதிகப்படவே செய்யும். இளம்வயதில் உடல் வளர்ச்சி துரிதப்படுவதுபோல நகத்தின் வளர்ச்சியும் துரிதமாகிறது. கால நிலைக்கும் நகத்தின் வளர்ச்சிக்கும் தொடர்பு இருக்கிறது.

கோடை காலத்தில் நகம வேகமாக வளரும். குளிர்காலதில் அதன் வளர்ச்சி மந்தமடைகிறது. அழகான நல்ல நகங்களைக் கொண்டவர்களுக்கு உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது. நகத்தின் வடிவம், அளவு, நிறம் போன்றவற்றைக் கவனமாக ஆராய்ந்தால் மனிதனிடம் இருக்கும் நோயைக் கண்டறிந்து விடலாம் என்றும் சொல்கிறார்கள்.

இரத்த ஓட்டத்தில் ஏற்படும் நெருக்கடிகள், இதயம், ஈரல், கிட்னியில் ஏற்படும் நோய்கள், தைராய்டு சுரப்பியில் ஏற்படும் சில வகை நோய்கள் போன்றவைகளை நகங்கள் வெளிப்படுத்துகின்றன.

நகங்கள் வெள்ளை நிறமாக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் இரத்த ஓட்டத்தில் ஏதோ பிரச்சினை இருப்பதாக அர்த்தம்.

ஈரல் வீக்கம், கிட்னி கோளாறு இருந்தாலும் நகங்கள் வெள்ளையாகத் தோன்றும்.

உடலில் நோய்த்தன்மை இருந்தால், நகத்தின் நிறம் பச்சையாகக காட்சியளிக்கும். நகங்கள் பிளந்து காட்சியளித்தால், விற்றமின் குறைவு என்று அர்த்தமாகும். இரும்புச்சத்துக் குறை வாக இருந்தால் நகங்கள் ஸ்பூன் போல குறுகிக் காணப்படும்.

உடலின் மற்ற பகுதிகளைப் பராமரிப்பதுபோல் நகங்களையும் பராமரிப்பது நல்லது.

நகம் கடிப்பது மோசமான பழககம். நகங்களை சுத்தப்படுத்த 'டிடர்ஜெண்ட்' சோப்புகளை பயன்படுத்தக் கூடாது. நக அழகுக்காக பெயிண்டிங் செய்வது தவறு.

கவனமில்லாமல் கண்டபடி நகங்களை வெட்டுவதும் நல்லதல்ல. நகங்களை மிகவும் குட்டையாக வெட்டக்கூடாது. நகங களுக்கு எந்தவித வர்ணமும் பூசக்கூடாது. அப்படி எதையாவது பூசினால் மாதத்தில் இரண்டு தடவையாவது அதை நீக்கிவிட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

பின்களைப் பிரித்தெடுப்பதற்கும் அடைத்திருக்கும் டின்களை திறப்பதற்கும் பலம்கொண்டு நகங்களைப் பயன்படுத்தாதீர்கள். நகம் நன்றாக இருக்க வேண்டுமானால் விற்றமின் 'ஏ' சத்து நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிடுங்கள்.

## சமைத்துச் சுவைப்போம்

### வெங்காய அவியல்



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| முருங்கைக்காய் | - 1 |
| வாழைக்காய் | - பாதி |
| பூசணி | - 1 துண்டு |
| கரட் | - 1 சிறியதாக |
| **அரைக்க:** | |
| பச்சைமிளகாய் | - 3 |
| சீரகம் | - 1 கரண்டி |
| பெரிய வெங்காயம் (சிறிய அளவில்) | - 6 |
| தேங்காய்த் துருவல் | - அரை கப் |
| **தாளிக்க:** | |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| தேங்காய் எண்ணெய் | - 2 கரண்டி |

**செய்முறை:**

காய்கறிகளைக் கழுவி நீளமாக நறுக்குங்கள். சிறிது உப்பு சேர்த்து வேகவிடுங்கள். தேங்காய்த் துருவலை அரைத்து வைத்துக்கொள்ளுங்கள். காய்கறிகள் வெந்ததும பசசை மிளகாய், சீரகம், வெங்காயம் ஆகியவற்றை அரைத்து சேருங்கள். பச்சை வாசனை நீங்கியதும் தேங்காய் விழுதைச சேர்த்து உடனே இறக்குங்கள். எண்ணெயைக் காயவைத்து கறிவேப்பிலை தாளித்துப் பரிமாறுங்கள். வித்தியாசமான சுவை தரும் இந்த வெங்காய அவியல். சாப்பிட்டு மகிழுங்கள்.

# நோர்வே பா.உறுப்பினர் வடமராட்சிக்கு விஜயம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள நோர்வே நாட்டின் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி இலி ஹெவ்ஸ்வாங் நேற்று முன்தினம் வடமராட்சி பகுதிக்கு விஜயம் செய்தார்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படகுகளை வழங்கும் திட்டத்தை முன்னெடுக்கும் நோர்வே அரசாங்கத்தின் பணிகளை பார்வையிடுவதன நிமித்தம் அவரின் விஜயம் அமைந்திருந்தது.

இதன்போது இவரைச் சந்தித்த வடமராட்சி மீனவ சமாசப் பிரதிநிதிகள், பொதுக் கடடமைப்புக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளமையால் நோர்வே நாடு தமக்கு நேரடியாகவே உதவிகளை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

அதற்குத் தாம் ஆவண செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.

இதேவேளை நோர்வேயின் எதிர்ககட்சி உறுப்பினர் இன்று வன்னிக்குச் சென்று தமிழ்ழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்சசெல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ந-04,43)

# மணல் ஏற்றி வந்த டிரக்குக்கு தீ வைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபடடிருந்த கன்டர் ரக டிரக் வாகனமொன்று நேற்று முன்தினம் அதிகாலை 4.45 மணியளவில் தீயிட்டுக கொளுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணற்காடு பகுதியில் பெருமளவில் மணல் அகழ்வு இடம்பெற்று வரும் நிலையில் வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோமாக மணலை அகழவேணடாமெனக் கலாசாரம் பேணும் குழுவினர் அறிவித்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனமே தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதால் கடல் நீர் உட்புக வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1972ஆம் ஆண்டு அரச வர்த்தமானிப் பிரகடனத்தின்படி வடமராட்சி கிழக்கில் மணல் அகழ்வு தடைசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (து-43)

# இராணுவ உயரதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ கட்டளைத் தளபதி பதவி வெற்றிடங்கள் சில நிரப்பப்பட்டுள்ளன.

கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதி, திருமலை 22 ஆம் படைப் பிரிவு கட்டளைத் தளபதி, அனுர்ாதபுரம் 21 ஆம படைப்பிரிவு கட்டளைத் தளபதி ஆகிய வெறறிடங்களுக்கே இராணுவ அதிகாரிகள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவ உபகரணப்பிரிவு நிர்வாக ஜெனரலாக பணியாற்றிய அவர் அதற்கு முனனர் இரு வருடங்களாக வெலிகநதை 23 ஆவது படைபபரிவன் கட்டளையதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

அதேநேரம் கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதியாக இருந்த பிரிகேடியர் பீ.சந்ரவங்ச திருமலை 22 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கமாண்டோ ரெஜிமென்டைச் சேர்நத இவர் ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்ட அனுபவம் மிக்கவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை மாவட்டத்தின் 22 ஆம் படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல சுமித் பாலசூர்ய பட்டலந்த இராணுவ உததரவு மற்றும் பயிற்சிக் கல்லூரியின் நிறைவேற்று அதிகாரியாகவும், பிரிகேடியர் சரத் பெர்ணாண்டோ அனுராதபுரம் 21 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுளளனர்.

இதேவேளை 21 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் நிஸ்ஸங்க விஜேங்க உபகரண நிர்வாக ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். (ந-4)

# விவாகரத்து வழக்குக்குக் குடும்ப ஆலோசனை

விவாகரத்து தொடர்பான நீதிமன்ற வழக்குகளுக்கு குடும்ப ஆலோசனை கட்டாயப்படுத்தப்படுவது தொடர்பாக நீதியமைச்சு கவனம் செலுத்துகிறது.

வீடுகளில் ஏற்படும் வன்முறைகளைத் தவிர்க்கும் முகமாக தற்போதுள்ள சட்டமூலம் தக்கமுறையில் திருத்தியமைக்கபபட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிககப்படும் என்று அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் விவாகரத்து வழககுகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதை இலகுவாக்கும்.

இந்த நடைமுறை வெற்றியளிக்கும் பட்சத்தில் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை 20 சதவீதத்தால் குறைவடையும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (து-2)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 6 அமைப்பாளர்கள் பதவி நீக்கம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 6 தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த அமைப்பாளர்கள் அந்தப் பதவியிலிருந்து நீங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு கிழ்ககின் பிரதான அமைப்பாளர் ரத்ன கமகே, கொழும்பு மேற்கின் ஹட்சன் சமரசிங்க, மகரகம அமைப்பாளர் அமல் சேனாதிலங்கார, வத்தளையின நீல் ரூபசிங்க, பலப்பிட்டிய அமைபபாளர் அஜந்த சொய்ஸா மற்றும் வென்னப்புவ அமைப்பாளர் இவோன் பெர்ணான்டோ ஆகி யோரே அப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டவர்களாவர்.

தொகுதி அமைப்பாளர் பதவிகளிலிருந்து இவர்களை நீக்கியிருப்பதாக இந்த ஆறு பேருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான அமைப்பாளரும் மகாவலி அபிவிருத்தியமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவிததுள்ளார்.

பலவீனமான நிலையில் இருக்கும் ஏனைய தொகுதிகளின் அமைப்பாளர்களும வரைவில் பதவி நீக்கப்பட்டு அவர்களுககுப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவதுடன் தற்போது வெற்றிடமாகவுள்ள தொகுதிகளுக்கும் புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ந-4)

# அவயவ பாவனையாளருக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஓகஸ்ட் மூன்றாம் வாரம் மிதிவெடி விழிப்புணர்வு வாரமாக கொண்டாடப்படுகின்றது. இதனையொட்டி யுனிசெவ் அதனுடன் இணைந்து செயற்படும் நிறுவனங்களை இணைத்து பல விழிப்புணர்வு நிகழவுகளை நடாத்த தீர்மானித்துள்ளது.

அதன் ஓர் அங்கமாக ஜெய்ப்பூர் நிறுவனத்தில் அவயவம் பொருத்திய பயனாளிகளுககு இடையேயான துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி ஒன்றை நடாத்தி பெறுமதியான பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்ற விரும்பும் ஆண் பெண் இருபாலரும் எதிர்வரும் 12ஆம திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை ஜெய்ப்பூர் நிறுவனத்தில் ஒப்படைக்குமாறும், போட்டி நடைபெறும் திகதி, இடம், நேரம் போன்ற விபரங்களை ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் அந் நிறுவனத்தின் யாழ்.அலுவலக நிர்வாக செயலாளர் அறிவித்துள்ளார். (ற)

# நோயாளர்களை அதிக நேரம் காக்க வைக்காமல் வைத்தியம்

(மருதங்கேணி)

மந்திகை அரசினர் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி மிகத் திறமையாகவும துப்புரவாகவும் நிர்வகிக்கப்பட்டு வருவதால் மகப்பேற்றுப் பயிற்சியை மந்திகை வைத்தியசாலையில் எதிர்காலத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற கிளினிக நடாத்தும் பரிசாரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் கூட்டத்தில் யாழ்.மாகாண பிரதி சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கேதீஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, நோயாளர்களை அதிக நேரம் தங்கவைக்காமல் குறிப்பிட்ட நேரங்களில் அவர்களை வரவழைத்து அதற்கேற்ப அவர்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டும். வவுனியா பொது வைத்யசாலையில் நடைமுறைப்படுத்தப்படடிருககும் முறையை இங்கு நடைமுறைப்படுதத எண்ணியுள்ளோம்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி மிகவும் திறமையாக இயங்குவதால் எதிர்காலத்தில் மகப்பேற்று பயிற்சி இங்கு நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இங்கு இப்போது பரிசாரர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றது. முதலாம் கட்ட பயிற்சிகள் 40 பேர் வரை கொடுக்கப்பட்டது. இப்போது இரண்டாம் பயிற்சி நெறி 60 பேர் வரை நடைபெற்று வருகிறது. எதிர்காலத்தில் எல்லா பயிற்சி நெறிகளையும் இங்கு நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் என்றார். (அ-35)

## மாதர் வீட்டுத் தோட்டத்துக்கான பயிற்சி வகுப்புகள்

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் மாதர் வீட்டுத் தோட்டத்திற்கான பயிற்சி வகுப்பொன்று விவசாய திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பை நடாத்துவதற்காக கரணவாய் கிழக்கு கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப் பயிற்சி வகுப்புக்கு 50 மாதர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுககான பயிற்சி வகுப்பு கரவெட்டி விவசாய போதனாசிரியரால் நடாத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுபபு முடிந்ததும் வீட்டுத தோட்டத்திற்கான மரக்கறி விதைகள் வழங்கப்படுமென விவசாய போதனாசிரியர் தெரிவித்துள்ளார். (து-35)

# ஆலய வழிபாட்டுக்கு கட்டுப்பாடு

(திருநெல்வேலி)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர் மற்றும் தீர்த்த உற்சவங்களுக்குச் செல்லும் பக்தர்கள் பெரிய வாகனங்களில் மட்டுமே செல்லமுடியுமென்று படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடங்களில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் இநத வருடம் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்லமுடியாது எனப் படையினர் அறிவித்துள்ளனர்.

பொதுமக்களின் நன்மைகருதியே தாங்கள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாகவும், வாகன நெரிசலைக் குறைக்கும நோக்குடனும், வேறு பல பாதுகாப்பு நடவடிக்கை காரணமாகவும் இந்நடைமுறையைத் தாங்கள் அமுல்படுத்தியுள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். (து-43)

# வடமராட்சி மீனவ குடும்பங்களுக்கு இல.மெதடிஸ்த திருச்சபை உதவி

(பருத்தித்துறை)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை சுனாமியால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டுளள 42 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி வள்ளங்கள், உபகரணங்களையும, வலை மீன்பிடி உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக சுமார் 20 இலட்சம் பெறுமதியான மீன்பிடி வள்ளங்கள் உபகரணங்களைப் பாதிக்கப்பட்ட 7 மீனவ குடும்பங்களுக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு சோயல் பெர்னாண்டோ இவைகளைக் கையளித்தார்.

தும்பளைப் பிரதேசத்தில் டயகோனி நிறுவனத்தின் அனுசரணையுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட 35 குடும்பங்களுக்கு வலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இவ்வலை உபகரணங்களை இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறைச் சாகரக் குருமார் பயனாளிகளுக்குக் கையளிததனர். (அ-52)

## வெங்காயச் செய்கை

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் இம்முறை ஆடி வெங்காயச் செய்கை 167 ஹெக்டராக உயர்ந்துள்ளது.

கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவில் 83 ஹெக்டரும், பருத்தித்துறை விவசாய போதனாசிரியர் பிரிவில் 84 ஹெகடருமாக 167 ஹெக்டர் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. (அ-35)

# மகாவலி அபிவிருத்தித்துறை பிரதியமைச்சர் இராஜினாமா

(கொழும்பு)

நீர் வடிகாலமைப்பு ஆற்றுப் பள்ளத்தாக்கு மற்றும் மகாவலி அபிவிருத்தித் துறை பிரதியமைச்சர் பிரேமலால் திசாநாயக்கா தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் செவ்வாய்க்கிழமை மாலை அவர் அறிவித்துள்ளார்.

இவர் இரத்தினபுரி மாவட்டம் நிவித்திகல தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவியிலிருந்தும் விலகிக்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இந்த முடிவிற்கு அவர் வந்துள்ளார்.

தனக்கு போதிய அதிகாரம் எதுவும் வழங்கப்படாத நிலையில் குறிப்பிட்ட பதவியை வகிப்பதில் எத்தகைய அர்த்தமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-4)

ஆசிய - ஆஸி.பிராந்தியத்தில் முதல்முறை

# இதயத்தின் பணியை செய்ய சாதனம்! 15 வயது சிறுவனுக்கு பொருத்தப்பட்டது

(கோலாலம்பூர்)

மலேசியாவில் 15 வயது சிறுவனின் இதயத்துடன் சிறிய சாதனத்தை டாக்டர்கள் பொருத்தியுள்ளனர். இதற்கான அறுவைச் சிகிச்சை 6 மணி நேரம் நடைபெற்றது.

இதயத்தின் பணிகளை அந்த சாதனமே மேற்கொள்ளும். சிறுவனுக்குப் பொருத்தமான மாற்று இதயம் கிடைக்கும் வரை இந்த தற்காலிக ஏற்பாடு தொடரும்.

இந்த மாதிரியான அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது ஆசிய -அவுஸ்திரேலிய பிராந்தியத்தில் இதுவே முதல் முறையாகும்.

அந்தச் சிறுவனின் பெயர் பிக்ரி நார் ஆஸ்மி. குழந்தையாக இருக்கும் போதே பிக்ரியின் இதயத்தில் கோளாறு இருந்தது. பிக்ரி வளர வளர, பிரச்சினையும் பெரிதானது. இவ்வாண்டு ஆரம்பத்தில் பிரச்சினை முற்றியது.

இதையடுத்து அவனுக்கு இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய, தேசிய இதய மருத்துவமனை டாக்டர்கள் முடிவு செய்தனர்.

கடந்த சனிக்கிழமை இந்த அறுவை சிகிச்சை நடைபெற்றது. ரூ.12.29 லட்சம் மதிப்புள்ள அமெரிக்க கருவி, சிறுவனின் உடலில் பொருத்தப்பட்டது. அது இதயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கருவி செயல்படுவதற்காக, உடலின் வெளிப்புறத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இருக்கும்.

அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. பிக்ரி குணமாகி வருகிறார் என மருத்துவமனை அறிக்கை தெரிவிக்கிறது. தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார் பிக்ரி.

ஐரோப்பா, அமெரிக்காவில் இம்மாதிரியான கருவி பொருத்தப்பட்டவர்கள், ஓராண்டு வரை பிரச்சினை ஏதுமில்லாமல் இருக்கிறார்கள். அந்த ஓராண்டுக்குள் மாற்று இதயம் கண்டறியப்பட்டு பொருத்தப்படுகிறது. (ற)

டிஸ்கவரி வீரர்கள் விண்ணில் 3ஆவது நடை பயணம்

# விண்வெளி ஆய்வு மையத்தில் புதிய கருவி பொருத்தத் திட்டம்




(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் பழுதுபட்டிருக்கும் 'கைரோஸ்கோப்' என்ற கருவியை மாற்றும் முயற்சியை டிஸ்கவரி விண்கல விஞ்ஞானிகள் திங்கட்கிழமை மேற்கொண்டனர்.

அமெரிக்க விஞ்ஞானி ஸ்டீவ் ராபின்சனும், ஜப்பானிய விஞ்ஞானி சொய்ச்சி நொகுச்சியும் விண்வெளியில் நடந்து சென்று இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். விண்வெளியில் டிஸ்கவரி விண்கல விஞ்ஞானிகள் நடந்து செல்வது இது இரண்டாவது முறை.

கடந்த சனிக்கிழமையும் விண்வெளியில் நடந்து சென்று பல்வேறு பணிகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட சுற்றுப் பாதையில் விண்வெளி ஆய்வு மையத்தை நிலைநிறுத்த உதவ மொத்தம் 4 கருவிகள் உள்ளன. அவற்றில் ஒன்றான கைரோஸ்கோப் பழுதுபட்டுவிட்டது. அதைச் சரி செய்வதே இந்தப் பயணத்தின் நோக்கம்.

மேலும் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வெளியேறுவதற்கான கதவையும் விஞ்ஞானிகள் பரிசோதிக்கத் திட்டமிட்டுள்ளனர். அதில சில சிக்கல்கள் இருந்ததாக அவர்கள் கூறியுள்ளனர். என்னவிதமான சிக்கல் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. மொத்தம் மூன்று விண்வெளி நடை பயணங்களை மேற்கொள்ள டிஸ்கவரி விண்கல விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். (ற)

# பிரிட்டிஷ் அலுவலகங்களை குறிவைத்து ஈரானில் வெடிகுண்டுத் தாக்குதல்



(தெஹ்ரான்)

ஈரான் நாட்டின் தலைநகரம் தெஹ்ரானில் பிரிட்டிஷ் ஏர்வேஸ், பிரிட்டிஷ் பெட்ரோலியம் ஆகிய 2 நிறுவனங்களின் அலுவலகங்கள் அருகில் வெடிகுண்டு வெடித்தது.

நேற்று முன்தினம் அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. கட்டடத்தின் கண்ணாடிகள் உடைந்தன. லேசான அதிர்ச்சி ஏற்பட்டது. சிறிது நேரம் இரு நிறுவன ஊழியர்களும் பரபரப்பாக இருந்தனர். பிறகு தடயவியல் சோதனைக்காக அலுவலகங்கள் மூடப்பட்டன.

தெஹ்ரானில் சாயா என்ற கட்டடத்தின் 10ஆவது தளத்தில் இவ்விரு நிறுவனங்களும் உள்ளன. நிறுவனங்களுக்கு வெளியே இருந்த குப்பைக் கூடையில் யாரோ வெடிகுண்டைப் போட்டிருக்கிறார்கள். அதை வெடித்திரியுடன் சரியாக இணைக்கவில்லை. எனவே சேதம் குறைவாகவே இருந்தது. (ற)



பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜரான சசிகலா, இளவரசி ஆகியோர் விசாரணை முடிந்து வெளியே வந்த போது எடுக்கப்பட்ட படம்.

# குண்டுத் தாக்குதல் சூத்திரதாரியை கண்டுபிடிக்க பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸ் தீவிர விசாரணை

(இலண்டன்)

இலண்டன் சுரங்க ரயில் நிலையங்களில் குண்டு வைத்த 4 பேர் உட்பட 20 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலண்டன் சுரங்க ரயில் நிலையங்கள் மற்றும் பஸ்சில் கடந்த மாதம் 7ஆம் திகதியும், 21ஆம் திகதியும் தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் 7ஆம் திகதி தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட 4 தீவிரவாதிகள் உட்பட 54 பேர் பலியானதுடன் 700 பேர் காயம் அடைந்தனர்.

21ஆம் திகதி குண்டுகள் சரியாக வெடிக்காததால் குண்டு வைத்த ஏனைய 4 தீவிரவாதிகளும் தப்பிவிட்டனர். ரயில் நிலையங்களில் வைக்கப்பட்டு இருந்த தானியங்கி காமிரா பிடித்த படத்தைப் பார்த்து 4 தீவிரவாதிகளையும் இலண்டன் பொலிஸார் அடையாளம் கண்டுபிடித்தனர்.

குண்டு வெடிக்கச் செய்த யாசின் ஹசன் (வயது24), முக்தார்சயத் இப்ராகிம் (வயது27), ராம்ஜி மொகமது ஆகிய 3 பேரும் இலண்டனில் பிடிபட்டனர். குண்டு வைத்து விட்டு இத்தாலிக்கு தப்பிச் சென்ற 27 வயது உஸ்மான் ஹுசைன் அங்கு இத்தாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

சர்வதேச பயங்கரவாதி என்று அவன் மீது ரோம் நகர பொலிஸார் வழக்கு பதிவு செய்து உள்ளனர். அவனை இங்கிலாந்து கொண்டுவர முயற்சி நடக்கிறது.

இவர்களை தவிர உஸ்மான ஹுசைன் 2 சகோதரர்கள் உட்பட மேலும் 16 பேரை பொலிஸார் கைது செய்து இருக்கிறார்கள்.

அவர்களிடம் பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர்களை பின்னணியில் இருந்து இயக்கும் தலைவர்கள் யார் என்பதை அறியும் முயற்சியில் இலண்டன் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ற)

''மழை ஓய்ந்தாலும் வெள்ளம் வடியவில்லை''. பல நாட்களாக தொடர்ந்து பெய்த மழை ஓய்ந்துள்ள நிலையில் வெயில் ஓரளவு தலைகாட்டத் தொடங்கியுள்ள வேளையில் நேற்று மும்பை நகர வீதியில் ஓர் குடும்பத்தினர் தமது வீடு நோக்கிச் செல்கின்றனர்.



# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் எரிவாயுக் கசிவு; 24 பேர் பலி

(பீஜிங்)

மத்திய சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட எரிவாயுக் கசிவினால் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் இருவர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து நேரிடும் போது சுரங்கத்திற்குள் 40க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்ததாக சீனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின் போது 14 தொழிலாளர்கள் உயிர்தப்பியுள்ளனர். சுரங்க விபத்துக்கள் இடம்பெறுவதில் சீனா முன்னிலை வகிக்கின்றது. கடந்த வருடம் மட்டும் சுரங்க விபத்துக்களால் சீனாவில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-2)

# ஓடுபாதையை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்தது விமானம்

அதிர்ஷ்டவசமாக 309 பயணிகள் உயிர் தப்பினர்

(ரொறன்ரோ)

ஓடுபாதையை விட்டு விலகிச் சென்ற தால விமானம் வெடித்தது. எனினும் இதிலிருந்த 309 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

'ஏர் பிரான்ஸ்' விமான நிறுவனத்தைச் சேர்ந்த ஏர்பஸ் விமானம் 'ஏ.எப் 358'. இது பாரீஸ் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் மாலை கனடா ரொறன்ரோவில் உள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையம் வந்து இறங்கியது.

இதில் 297 பயணிகளும் 12 விமான ஊழியர்களும் இருந்தனர். தரை இறங்கிய விமானம் ஓடு பாதையில் ஓடிக்கொண்டிருந்த போது பாதையின் எல்லையைத் தாண்டி ஒரு பள்ளத்தில் போய் நின்றது.

உடனடியாக விமானத்திலிருந்து அனைவரும் விமானத்தை விட்டு வெளியேறி அலறி அடித்துக்கொண்டு ஓடினர்.

விமானம் வெடித்து தீப்பற்றும் என்ற பீதியில் அனைவரும் தலைதெறிக்க ஓடினர். இதில் யாரும் உயிரிழக்கவில்லை. ஆனால் 24 பேருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. (ற-9)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 23


பி.ஜே.ராஜய்யா

## இந்தியா வந்தார்!

1973ஆம் ஆண்டு பிற்பகுதியில் குர்திஸ்தான் போராட்டம் திடீரென தீவிரம் அடைந்து குர்து போராளிகள் ஈரான் மூலம் கிடைத்த அமெரிக்க ஆயுதங்களைக் கொண்டு பல நகரங்களைப் பிடித்துக்கொண்டார்கள்.

அமெரிக்கா-ஈரான் கூட்டுச் சதி என்ற நோக்கில் மட்டும் குர்து பிரச்சினையைப் பார்த்த சதாம் உசேன், அமெரிக்காவின் சதி வெற்றிபெற்றுவிடக் கூடாது என்ற உறுதியுடன் களத்தில் இறங்கினார்.

குர்து போராளிகளுக்கு எதிராக விமானத் தாக்குதலையும் டாங்கித் தாக்குதலையும் முழுமூச்சுடன் நடத்தினார்.



இந்திராகாந்தியுடன் சதாம்

பலத்த உயிர் -உடைமைச் சேதங்களுக்குப் பின் சதாம் வெற்றி பெற்றார்.

பர்ஸானீ நாட்டை விட்டே தப்பி ஓடினார்.

சி.ஐ.ஏ. வின் இந்த முயற்சியும் தோற்றுப் போனது.

பக்கர்-சதாம் ஆட்சியைக் கவிழ்க்க இப்போதைக்கு வேறு வழியில்லை என்ற முடிவுடன் அது பின்வாங்கியது.

ஈராக்கில் அமைதி திரும்பியது.

அமெரிக்க பெட்ரோல் கம்பெனியை நாட்டுடைமை ஆக்கியதாலும், பெட்ரோல் விலை உயர்ந்ததாலும் ஈராக்கில் செல்வம் குவிந்தது. சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னெப்போதையும் விட கணிசமாக உயர்ந்தது.

குர்து இனத்தினர் நீங்கலாக பெரும்பாலான ஈராக்கியர்கள், மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சியை தங்களுக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கொண்டாடினார்கள்.

மேலும், வளர்ந்து வரும் நாடுகள் மத்தியிலும் ஈராக் ஆட்சியின் புகழ் பரவியது. இந்தியாவுக்கும் ஈராக்குக்குமான நல்லுறவு இந்திராகாந்தி ஆட்சிக்காலத்தில் புதிய உச்சத்தைத் தொட்டது. பிரதமர் இந்திராவின் அழைப்பின் பேரில் துணை ஜனாதிபதி சதாம் இந்தியாவுக்கு வருகை தந்து நட்புறவை வலுப்படுத்தினார். இந்தச் சமயத்தில் ஈராக் அரசியலில் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

பரஸ்பரம் ஒன்றுபட்டு, ஒத்த கருத்துடன் இதுநாள் வரை செயல்பட்டு வந்த ஜனாதிபதி பக்கருக்கும் துணை ஜனாதிபதி சதாம் உசேனுக்கும் மோதல் வெடித்தது.



சதாமின மாமா கைருல்லா வீட்டு ஆலோசனை அறை நடுநாயகமாக கைருல்லா அமர்ந்திருந்தார். அவருக்கு வலதும் இடதுமாய் ஜனாதிபதி பக்கரும், துணை ஜனாதிபதி சதாம் உசேனும் உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களைச் சுற்றி குடும்ப உறவினர்களும், கட்சி வி.ஐ. பிக்களுமாய் அறை நிரம்பி வழிந்தது. பலருக்கு உட்கார இடம் போதாததால், நின்று கொண்டிருந்தார்கள். அறையின் வாசல் மனிதக் கதவுகளால் அடைபட்டிருந்தது.

இத்தனை பேர் நெருக்கமாய் கூடியிருந்த போதிலும் அங்கு அசாதாரணமாக அமைதியும் இறுக்கமும் கனத்துத் தொங்கிக் கொண்டிருந்தது...

சதாம் நிமிர்ந்து பக்கரைப் பார்த்தார். அதேசமயம் பக்கரும் சதாமைப் பார்த்தார். இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன. பக்கர் உடனே பார்வையை விலக்கித் தரையில் பதித்தார்.

இருவர் மனங்களும் ஒருவரை ஒருவர் விலக்கி தூரமாய் நிறுத்திக் கொண்டிருந்தன. எல்லாம் கொமேனியால் வந்த வினை!

கொமேனி ஈரான் மதத்தலைவர். ஷியா வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம் மத தீவிரவாதி.

இவர்1979 தொடக்கத்தில் ஈரானில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

கொமேனி சார்ந்த ஷியா வகுப்பு முஸ்லிம்களே அரபு உலகில் எண்ணிக்கையில் அதிகம் எனினும் அவர்கள் ஒரு நாட்டில் கூட அப்போது தலைவராக இல்லை. இதனால் "அரபு உலகிலுள்ள ஷியா முஸ்லிம்கள் தங்கள் நாட்டு ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டும் ஷியாக்கள் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். மதச்சார்புள்ள இஸ்லாமிய ஆட்சியை நிறுவ வேண்டும்" என்று கொமேனி அறைகூவல் விடுத்தார்.

கொமேனியின் இந்த அறைகூவல் ஈராக்கில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்திவிட்டது.

ஈராக்கியர்களில் 95 சதவிகிதம் பேர் முஸ்லிம்கள். அவர்களில் 55 சதவிகிதத்தினர் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர்கள். மீதி 40 சதவிகிதத்தினர்தான் ஸுன்னி முஸ்லிம் வகுப்பினர்.

பக்கரும் சதாமும் ஸுன்னி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் ஈராக்கில் ஸுன்னி வகுப்பு ஆட்சியை நிறுவிவிடவில்லை. மதச்சார்பற்ற, வகுப்புசார்பற்ற ஆட்சியைத்தான் அமைத்திருந்தார்கள். காரணம் அவர்களின் மறுமலர்ச்சிக் கட்சியின் கொள்கையே அதுதான்!

அப்படியிருந்தும் கொமேனியின் அறைகூவல் கேட்டு ஈராக் ஷியா வகுப்பினர் ஆவேசம் அடைந்தார்கள். கிளர்ச்சியில் இறங்கினார்கள்.

வகுப்புக்கலவரம் மூண்டது.

கொமேனி தூண்டி விட்ட ஷியாக்களின் கிளர்சசியை வளரவிடக்கூடாது. விட்டால் அது நம்ம மத வகுப்புச் சார்பின்மைக் கொள்கையை குழி தோண்டிப் புதைச்சிடும் என்று சதாம் உஷாரானார்.

கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த ஷியா வகுப்புத் தலைவர்களை கைது செய்தார். இதனால் கிளர்ச்சி அடங்குவதற்குப் பதிலாக தீவிரமடைந்தது.

கிளர்ச்சி மெல்ல மறுமலர்ச்சிக் கட்சிக்குள்ளும் புகுந்தது. ஷியாக்களின் கிளர்ச்சியில் நியாயமும் இருக்கிறது என்கிற ரீதியில் மறுமலர்ச்சிக் கட்சியிலிருந்த சில ஷியாத் தலைவர்களே பேச ஆரம்பித்தார்கள். கிளர்ச்சிக்கு அவர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவு கொடுத்தார்கள்.

"கட்சிக்குள் இருக்கிற அந்த கருங்காலிகளைத் தண்டிக்கனும்" என்றார் சதாம்.

இதை பக்கர் ஏற்கவில்லை. அதற்குப் பதிலாக, கட்சியில் உள்ள ஷியாத் தலைவர்களின் கருத்தை அலட்சியம் செய்யிறது நல்லது இல்ல. ஒரு சமரசத் திட்டம் தயாரிக்கனும். கிளர்சியாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தனும். கிளர்ச்சியை சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வரனும் என்றார் பக்கர். இதற்கு சதாம் உடன்பட மறுத்தார்.

"மத வெறியர்களோடும் வகுப்பு வெறியர்களோடும் சமரசம்கிற பேச்சுக்கே இடமில்லை" என்றார் சதாம். கட்சியில் பதினைந்து ஆண்டுகளும் ஆட்சியில் பதினொரு ஆண்டுகளும் முட்டல்கள் மோதலகளின்றி இணக்கத்துடன் பணியாற்றி வந்த பக்கருக்கும் சதாமுக்கும் இதனால் விரிசல் ஏறபட்டது.

கட்சியிலிருந்து சில ஷியா தலைவர்களும் சதாமின் வளர்ச்சிகண்டு பொறாமைப்பட்டவர்களும் சதாமை ஒழிக்க இது தான் நல்ல சமயம் என்று பக்கருக்கு ஆதரவு கொடுத்து அவரை தூண்டி விட்டார்கள். சதாமை துணை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கினால்தான் கிளர்ச்சியாளர்களோடு சமரசம் செய்ய முடியும் என்று பக்கர் நினைக்க...

பக்கரை ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றினால்தான் கடுமையான நடவடிக்கைகள் மூலம் கிளர்ச்சியை ஒடுக்க முடியும் என்று சதாம் முடிவு செய்ய... கருத்து வேறுபாடு அதிகாரத்துக்கான போட்டியாய் முகம் மாறியது... இருவருமே குடும்பப் பெரியவர்களின் பேச்சுக்கு கட்டுப்படக் கூடியவர்கள் என்பதால் "யார் ஆட்சியில் நீடிப்பது?" என்று முடிவு செய்யும் பொறுப்பை பெரியவர்களிடம் விட்டுவட்டு அமைதியாகக் காத்திருந்தார்கள். குடும்பப் பெரியவர்களும் மற்ற முக்கியஸ்தர்களும் மௌனமாய் யோசித்தார்கள்.

கடைசியில் மாமா கைருல்லாதான் மௌனத்தைக் கலைத்தார். (தொடரும்)

## இராணுவத்தின் துப்பாக்கி சூட்டிற்கு ஊர்காவல் படை வீரர் காயம்

(கொழும்பு)

வவுனியாவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஸ்ரீலங்கா ஊர்காவல் படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சிப்பாய் சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா ஸ்ரீலங்கா காவல் துறைப் பொறுப்பதிகாரி ஏ.எம்.சி.அபயசிங்க பண்டா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை வவுனியா தந்திரிமலை இராணுவ முகாமுக்கு சமீபமாக உள்ள பிரதேசத்தில் ஊர்காவல் படை சிப்பாய் வேட்டைக்கு சென்றதாகவும் ஆள் நடமாட்டத்தைக் கண்ட இராணுவத்தினர் அப்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஊர்காவல்படை வீரர் காயமடைந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

காயமடைந்த ஊர்காவல் படை வீரர் தந்திரிமலை காவல் நிலையத்தில் கடமையாற்றி வரும் அனுர பஸ்நாயக்க என அடையாளம் காணப்பட்டுள்ளார். (து)

### மேர்வின் சில்வா மகன் விவகாரம்

## தகவல்களை வழங்க முன்வருமாறு பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் வைத்து பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவும் மேலும் இருவரும் பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளைத் தாக்கியமை தொடர்பில் தங்களிடம் இருக்கும் தகவல்களை தந்துதவுமாறு பொலிஸ்மா அதிபர் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தகவல் தருபவர்கள் எவ்வித பயமுமின்றி தகவல்களை வழங்க முன்வர வேண்டும். அவர்கள் தரும் தகவல்களின் இரகசியம் பேணப்படும் என்றும் சாட்சியம் அளிப்பவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தை பொலிஸ்மா அதிபர் கையாண்ட விதத்திற்காக அவர் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் பக்கச்சார்பின்றியே நடத்தப்படும்.இதுவரை 5பேரளவில் சுயமாக முன்வந்து இந்த சம்பவம் தொடர்பில் தகவல்களை வழங்கியுள்ளனர் என அவர் தெரிவித்தார். (4)

## நள்ளிரவுக்குப் பின்னர் மது விநியோகத்திற்கு தடை!


(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்துக் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் நள்ளிரவு 1.00மணிக்குப் பின்னர் மதுபான விநியோகம் மற்றும் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் உள்ள அனைத்துக் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் இரவு 1.00மணிக்குப் பின்னர் மதுபானசாலைகள் கட்டாயமாக மூடப்பட்டிருக்க வேண்டும் என சட்டம், ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஹோட்டல்கள், உணவகங்கள், இரவு விடுதிகள்,விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விடுமுறை விடுதிகள் ஆகிய அனைத்து இடங்களுக்கும் இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்தக் கால எல்லை நீடிக்கப்படமாட்டாது என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (4)





வடமராட்சி கிழக்கு புனர் வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் கட்டடத் திறப்பு விழாவின் போது நிறுவனத்தின் பெயர்ப்பலகையினை பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகமாகிய செம்பியன் பற்று பிரதேசசபை பொறுப் பதிகாரி பொ. தங்கராசா திரைநீக்கம்செய்து வைப் பதை முதலாவது படத்திலும், கணனி பயிற்சி நிலையத்தினை வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப் பாளரும் வடமராட்சி கிழக்கு புனர் வாழ்வு புனரமைப்பு நிறுவன துணைப் பெறுப்பாளருமாகிய தமிழரசன் நாடாவைவெட்டி திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:- அ. சசிகுமார்)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# கௌதம புத்தபிரான் மகிழ்ந்த நாள்

தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கூடிய மக்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

வவுனியாவில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தின் தொடராக மட்டக்களப்பில் நடந்த எழுச்சிப் பேரணி மற்றும் மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி வண. தம்பிட்டிய சுமண தேரரும் கலந்துகொண்டமை முக்கியமானதொரு நிகழ்வாகும்.

பொதுக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்த புத்த பிக்குகள் சாகும்வரையான உண்ணாவிரதமிருந்து, தமது பெயருக்கே களங்கம் விளைவித்துக் கொண்டனர்.

கௌதம புத்தபிரானின் போதனைகளை மக்கள் மத்தியில் பரப்பி நாட்டில் சாந்தி, சமாதானம், ஒற்றுமை என்ற உயர்ந்த பண்புகளை நிலைநாட்டவேண்டிய புத்த பிக்குகள்,

தம்கையால் தமக்கே மண்ணை அள்ளிக் கொட்டி உலக அரங்கில் அவப்பெயரை பெற்றுக்கொண்டனர்.

மல்வத்தபீடம், அஸ்கிரியபீடம் ஆகியவற்றின் மகா நாயக்கர்கள் முதல் பௌத்த பிக்குகள் வரை பொதுக் கட்டமைப்பை எதிர்த்ததன் மூலம் தாம் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதை நிலைநிறுத்தினர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை வழங்கி, அந்த மக்களின் வாழ்வியலுக்கு ஆதாரம் வழங்க வேண்டிய நேரத்தில், அதனைத் தடுக்கும் வகையில் புத்த பிக்குகள் செயற்பட்டார்கள் எனில், அவர்கள் புத்த பிரானின் சிந்தனைகளைப் பரப்ப முனைந்தவர்களல்ல என்பது தெளிவாகின்றது.

கௌதம புத்தபிரான் நேரில் வந்தால் தனது போதனைகளைப் பரப்புவதாகக் கூறி, துறவுபூண்டு காவி தரித்தவர்களின் செயல்கண்டு இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார். அந்தளவிற்கு புத்தபிக்குகளின் நடவடிக்கைகள் மோசமாக அமைந்திருந்தன.

அதேவேளை பொதுக் கட்டமைப்பைக் கடுமையாக எதிர்த்ததன் மூலம் புத்தபிக்குகள் குறித்த தமிழ்மக்களின் எண்ணப்பாடு எதிர்மறையாகவே உள்ளது.

எனினும் பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கின்ற ஒருசில புத்த பிக்குகளும் இருக்கின்றார்கள் என்ற உண்மையை நிராகரித்துவிடமுடியாது.

இவ்வாறு கூறுவதை புத்தபிக்குகளுக்கு வக்காள த்து வாங்குவதாகவும் கருதிவிட லாகாது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடந்த தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் புத்தபிக்கு ஒருவர் கலந்துகொண்டு, அதனை வரவேற்றுப் பேசினாரெனில், அவரே கௌதம புத்தரின் உண்மையான விசுவாசியாவார்.

பௌத்த பிக்குகளால் இரத்தக் கண்ணீர் வடித்திருக்கக்கூடிய புத்தபிரான் நேற்று முன்தினத்தில் நிச்சயமாக மகிழ்வடைந்திருப்பார்.

அந்த மகிழ்வைக் கொடுத்தவர் மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி வண. தம்பிட்டிய சுமண தேரர் என்றால் அது மிகையில்லை.

# உயிரைக்கொடுத்தாவது மதமாற்றத் தடைச்சட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் -ஹெல உறுமய

(கொழும்பு)

மதமாற்றத் தடைச் சட்டத்தை உயிரைத் தியாகம் செய்தாவது நிறைவேற்றியே தீருவோம். அமெரிக்காவின் எதிர்ப்புக்குறித்து அக்கறையில்லை.இது எமது நாட்டின் உள்ளக விவகாரம் என்பதை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ஜாதிகஹெல உறுமயக்கட்சி தெரிவித்துள்ளது.

மதமாற்றத்தடைச்சட்டத்திற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக வெளியான செய்திகள் குறித்து ஹெல உறுமய இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஹெலஉறும கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது பலாத்காரமாக மதமாற்றம் செய்யப்படுவது பௌத்த,இந்துமக்களுக்கு பெரும் பிரச்சினையாகும். இது குறித்து அமெரிக்க தூதுவரிடமும் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் அலுவலக அதிகாரிகளிடமும் பேச்சுவார்த்தை நடத்திய போது இவ்விவகாரம் குறித்து நாம் எமது தீர்க்கமான முடிவை அறிவித்திருந்தோம்.

இதன் போது மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்ப்பதற்கான நியாயமான காரணங்களை அவர் முன்வைககவில்லை. மதமாற்றத்தடைச் சட்டத்தினால் அமெரிக்காவிற்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இது எமது நாடடின் உள்ளகப்பிரச்சினை. இப்பிரச்சினையின் அபாயததை எமது நாட்டவரே நன்கறிவர். பலாதகாரமாக மதம் மாற்றுவது என்பது மிலேச்சத்தனமான செயல். இவ்வாறான மிலேச்சத்தனமான காரியத்தை எந்த நாடுகளுமே அங்கீகரிக்காது.

இதன் படி மதமாற்றத் தடைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது தொடர்பாக எதிர்வரும் 9ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடி இறுதி முடிவு எடுக்கவுள்ளது.

இதன்படி இச்சட்டத்தை நிறைவேற்றும் வரை ஹெல உறுமய தொடர்ந்து போராடும். இச் சட்டத்தின் அவசியம் குறித்து அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விளக்கமளித்து ஆதரவைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஹெல உறுமயகட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

# பொதுமக்களின் போக்குவரத்து கட்டுப்பாட்டை நீக்குமாறு மன்னார் அ.அதிபர் வேண்டுகோள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் பொதுமக்கள் சென்றுவருவதற்கான கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும் என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.விசுவலிங்கம் இராணுவத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அண்மையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மன்னார் சிசில் இராணுவ அதிகாரி கேணல் ஜெயக்கொடியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

இநதப் பேச்சுவார்த்தையின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான செட்டியார் கட்டை அடம்பன் பகுதிக்குள அரச அரசசார்பற்ற உத்தியோகத்தர்களும் மற்றும் வெளியாரும் சென்று வருவதற்கான கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொணடுள்ளார்.

1997ஆம் ஆண்டு முதல் இந்த கிராம பகுதிக்குள் 78 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடந்த ஒரு வருடங்களாக இந்தப்பகுதிக்குள் அக்கிராம மக்கள் தவிர்ந்த ஏனையோர் சென்று வருவதனால நானாட்டான் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் 21வது பிரிகேட்டியின் அனுமதி பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு தொடர்வதாகவும் இது நடைமுறைக்கு உகந்ததலல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பகுதி மக்களின் நலன் கருதி விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டைத்தளர்த்த நடவடிக்கை எடுக்கும் படி அரச அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (து-2)

## பாவனைக்கு உதவாத கோதுமை மா

(கொழும்பு)

கோதுமை மாவை கொள்வனவு செய்யும் போது விழிப்பாக இருக்கும் படி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பாவனைக்குதவாத ஒரு தொகுதி கோதுமை மா தறபோது நாட்டில் விநியோகிக்கப்பட்டுவருவதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் அண்மையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பாவனைக்குதவாத ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட கோதுமை மா கண்டுபிடிக்கப்படடுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட கம்பனியின் இலச்சினையைப் பயன்படுத்தி பொதி செய்யப்பட்ட கோதுமை மா சந்தையில் விற்பனை செய்யப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்டுள்ள மா பாவனைக்குதவாதது என்று அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இதற்கமைய நீதிமன்றம் சம்பந்தப்பட்ட கம்பனி கோதுமை மாவை விநியோகிப்பதற்கு தடை உத்தரவை விதித்துள்ளது. (அ-2)

## மின்சாரசபை மறுசீரமைப்பு; அரசு மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கு இயறறப்பட்டுவரும் சட்ட மூலத்தின் ஊடாக நிறுவனங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

மின்சார சபை மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கையில் இணக்கம் காணப்படாத நிறுவனம் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டால் அதனைத் தோல்வியுறச் செய்வதற்கு கடும் நடவடிக்கை எடுககப்போவதாக தொழிறசங்கத்தின் பிரதான செயலாளர் றஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார். இதேவேளை, மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்றும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (ற-2)

# இரத்தினக்கல் தொடர்பான கற்கை நெறி பல்கலைக்கழகம் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக்கைத்தொழில் முறை சார்ந்ததாகவும் பாரம்பரிய மட்டத்திலும் கற்றுக் கொளளக் கூடிய சகல வசதிகளையும் கொண்ட பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்படுகிறது.

சப்பிரகமுவ மாகாண சபையும் இரத்தினக்கல் ஆபரண ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனமும் இதற்கான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்ல இருப்பதாக முதலமைச்சர் மஹிபாலகேரத் தெரிவித்துள்ளார்.

கேகாலை தொழில் நுட்பக் கல்லூரியில் புதிதாகத் தொடங்கபபட்ட ஆபரண வடிவமைப்புத்தொடர்பான கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

இரத்தினக்கற்களை வெட்டுதல்,பட்டை தீட்டுதல், ஆபரணங்களை வடிவமைத்தல் போன்ற விடயங்கள சார்ந்த பயிற்சிகள் கண்டி ஹஸலக்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாத்திரமே போதிக்கப்படுகின்றன.

கேகாலை தொழில்நுட்பக் கல்லூரியில் அதனைத் தொடங்கியிருப்பது முக்கியமான விடயம் என முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


இரத்தனக்கல் ஆபரண ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தின் தலைவர் சி.ஏ.எம். பெரேரா உரையாற்றுகையில் தமது அமைப்புப் புதிய இரத்தினக்கல் படிமங்களை தேடும் முயற்சியை தொடங்கியிருப்பதாகக் கூறியுள்ளார். (அ-2)

## திருகோணமலையில் சுற்றிவளைப்புத் தேடுதல்

(கொழும்பு)

திருகோணமலையில் நேற்று முன்தினம் காலை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை நடாத்தியுள்ளனர். திருகோணமலை மாவட்ட புல்மோட்டை முதலாம் இரண்டாம் வட்டாரங்களில் அதிகாலை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்புகளிலும் தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டதோடு விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். இதனால் பொது மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் இப்பகுதிகளில் பெரிதும பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)



## சாயி அருளமுதம்

வருங்கால நிகழ்வின் முன்னறிவிப்பாக இதை நான் கூறிவைக்கிறேன். அவதாரத்திடம் நன்மைகளைப் பெறும் பொருட்டு பல இலட்சக் கணக்கானவர்கள் திரளும் நாள் வெகுவிரைவில் வருமென நான் ஆறு ஏழு வருடங்களாகச் சொல்லி வருகிறேன். அவகாசம் இருக்கும் பொழுது அனைத்து அருளையும் ஆனந்தத்தையும் உங்களால் முடிந்தவரை திரட்டிப் பாதுகாத்து வையுங்கள் அப்பொழுது அந்த ஞாபகத்தினதும் அனுபவத்தினதும் இனிமையை மீணடும் மீண்டும் சிந்திப்பது உங்களுக்கு ஆதாரமாக விளங்குமல்லவா?

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

### முக்கோண ஒருநாள் தொடரில்

# இலங்கையிடம் இரண்டாவது தடவையாக மண் கவ்வியது இந்தியக் கிரிக்கற் அணி

## யாழ்.வீரர் இலங்கை அணியில்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வரும் முக்கோண ஒருநாள் கிரிக்கட் போட்டியில், நேற்று இலங்கை இந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 4 விக்கற்றுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் களமிறங்கிய இந்தியா இந்தியா 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கற்றுக்கள் இழப்பிற்கு 220 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கங்குலி 51 ஓட்டங்களையும், இர்பான் பதான் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும், முஹமட் கைவ், சேவாக் ஆகியோர் முறையே 34,32 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் டில்சான் 4 விக்கற்றுக்களையும், மகரூப், ஜெயப்பிரகாஸ்தரன், உபுள் சந்தன ஆகியோர் தலா ஒரு விக்கற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48 ஓவர்கள் முடிவில் 6 விக்கெற்றுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் ஜெயவர்த்தன, உபுள் சந்தன ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 94, 44 ஓட்டங்களைப் பெற்றனர். அத்தப்பத்து 29 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் நெஹ்ரா 2 விக்கெற்றுக்களையும், இர்பான் பதான், பலாஜி, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கற்றுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை நேற்றைய ஆட்டத்தின்போது இந்திய அணிவீரர் சௌரவ் கங்குலி சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டினார்.

இதனடிப்படையில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற மூன்றாவது வீரர் என்ற பெருமையை தனதாக்கினார்.

இலங்கை அணியில் புதிய வேகப்பந்துவீச்சாளர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார். கோண்டாவிலைச் சேர்ந்த ஜெயப்பிரகாஸ்தரன் என்ற வீரரே சேர்க்கப்பட்டுள்ளார். இவர் தனது முதலாவது போட்டியில் 6 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெற்றினைக் கைப்பற்றியுள்ளார். (சு)

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்தியகல்லூரியின் விடுதிப்பகுதியில் இருந்து தலை துண்டிக்கப்பட்ட நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்ட இச்சடலம் 20வயது மதிக்கத்தக்க பெண்ணினுடையது என தெரிவிக்கப்பட்டது,

குறிப்பிட்ட பாடசாலையில் பயன்படுத்தப்படாத பகுதி ஒன்றில் இருந்து இச்சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் அடையாளம் காண்பதற்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (சு)

## ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆதரவு

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் மகிந்தராஜ பக்ஷவை ஆதரிப்பதென வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மத்திய குழு முடிவு செய்திருப்பதாக அக்கட்சி வட்டாரத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

தேசியப்பிரச்சினை, பொருளாதாரம், ஜனநாயக நிர்வாகம் என்பன குறித்து ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கருத்துக்கள், கொள்கைகள் தொடர்பாக பிரதமருடன் ஆராயவுள்ளதாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடிய உடன்பாடொன்று எட்டப்படுமாயின் ஜனாதிபதித்தேர்தலில் அவருக்கு அதிக பட்ச ஆதரவை தமது கட்சி வழங்குமென அத்தகவல் தெரிவித்தன.

கட்சி மத்திய குழுவின் இம்முடிவு, பிரதமருக்கு தெரியப்படுத்தப்படும் என்றும் எதிர்வரும் 8ஆம் திகதி பிரதமருடன் இது தொடர்பாக சந்திப்பு நடைபெறும் என்றும் தெரிவித்துள்ள வாசுதேவ நாணயக்கார, இச்சந்திப்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்பாடு காணப்படுமாயின் அது குறித்து மக்களுக்கு அறியப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (சு)

## வன்னியில் இருந்தவாறு கொழும்பை...

கூறியதாவது.

எமது நாட்டின் அரசியல் நெருக்கடிகள் புதிய புதிய மாற்றங்களுடன் அதிகரித்துச் செல்கின்றது.

இந்த நெருக்கடிகள் ஒரு நேரம் ஒரேஅளவில் இருக்கின்றது. மறு நேரம் அதிகரித்துச் செல்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் இந்தப் பிரச்சனை அதிகரித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க கூடியதொரு தலைவரை நாம் தெரிவுசெய்து கொள்ளாததாலேயே இவ்வாறான பிரச்சினைகள் எழுகின்றன.

இங்கிருப்பது தலைமைத்துவம் பற்றிய பிரச்சினையாகும்.

சரியான தலைமைத்துவம் இருந்த காலங்களில் இந்த நாடு நேராக இருந்தது. தேசிய பாதுகாப்பு நல்ல நிலைமையில் இருந்தது. கலாசாரமும் பொருளாதாரமும் சீராக இருந்தது. இன்று இருக்கின்ற பிரச்சனை சரியான தலைமையின்மையாகும்.

நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களையும் வழங்குகிறது. எதிர்காலத்தில் கொழும்பு கோட்டை பகுதி முழுவதையும் வன்னியிலிருந்தவாறே வெடித்துச் சிதற வைக்ககூடிய தொழிநுட்பங்கள் தற்போது புலிகளிடம் உள்ளன.

அவர்கள் விடுதலைப்புலகளுக்கு வழங்கும் உதவிகளின் சிறியளவு தொடர்பான தகவல்களே வெளிவருகின்றன. சமாதானத்தின் பெயரால் நாட்டின் பாதுகாப்பு பலியிடப்பட்டுள்ளது.

இன்று எமது இராணுவ அதிகாரிகள் பலர் ஜனாதிபதியை விட சமாதான சலாட்டில் மூழ்கி உள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அடிமையாகியுள்ளனர்.

எமது நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதற்காக நோர்வே தரப்பினர் பல திட்டங்களை வகுக்கின்றனர்.

இதற்கென பௌத்த கலாசாரத்தை குலைப்பதற்காக சங்க சபையினரின் எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முனைகின்றனர். தேசியப் பற்றையும் சமூகப் பற்றையும் அழிக்கின்றனர்.

இப்போது கல்வி சீர்திருத்தங்களை கொண்டுவர கல்வி அமைச்சின் செயலாளர் முயற்சிக்கின்றார்.

அவற்றுக்குத் தேவையான நிதியை உலக வங்கியே வழங்குகிறது. அதன் மூலம் செய்யப்படப் போவது சர்வதேச பாடசாலைகளின் பிறிதொரு வகுப்பினை ஏற்படுத்துவதாகும்.

எமது நாட்டின் பலவீனமான தலைவர்களின் ஊடாக மேற்கத்தேய சக்திகள் இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க கூடிய தலைமையே தேவை என்றார். (சு)

## ஜனாதிபதித்...

பிடப்பட்டமைக்கு அமைவாக அவரது பதவிக்காலம் இவ்வருடத்துடன் பூர்த்தியடைக்கின்றது.

அதன் பிரகாரம் சட்ட விதிகளுக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலுக்காக இவ்வருடம் செப்ரெம்பர் 17ம் திகதிக்கும், ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் வேட்பு மனுக்கள் கோரப்படவேண்டுமெனவும் அம் மனுவில் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஜனாதிபதித்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோருவதற்கான அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் விடுப்பதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு மனுதாரரின் மனுவில் கோரப்பட்டுள்ளது. (சு)

## சமாதான.....

அதிகரித்துள்ளன. பாணின் விலை 3 ரூபாவாலும், ஆட்டுஇறைச்சி 50 ரூபாவாலும் அதிகரித்துள்ளது.

இவற்றிற்கு ஈடாக பணவீக்கம் 14 வீதமாக உயர்ந்துள்ளதாக நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட இவ் வருடம் இரண்டு மடங்குகளாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகவங்கி 6 மாதங்களுக்காக எதிர்வுகூறிய 12 வீதத்திலும் அதிகமாகும். இதேவேளை ஆழிப்பேரலை உதவி காரணமாக இலங்கையின் நாணயப் பெறுமதி 5வீதத்தினால் உயர்ந்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (சு)

## மன்னார்....

அனுப்பிவைத்துள்ளார்.

மீள்குடியேற்றம், விவசாயம் மற்றும் மதவழிபாடு தொடர்பாக தாம் கலந்துரையாடவிரும்புவதாக அவரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு)

## கிளிநொச்சியில்.....

ஆகியோர் வழங்கினர்.

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள மக்கள் எழுச்சி நிகழ்வில் ஒருலட்சம் வரையான மக்களை அணிதிரட்டி, சர்வதேச சமூகத்திற்கு தமிழ்மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்படவுள்ளது. (சு)

## ஐ.தே.கட்சியின்.....

திருப்பும் வகையில் கருத்துக்களை கூறிவருகிறது.

பிரதமர் வேட்பாளரை நியமிக்கையில் ஏனைய கட்சிகளைப் போல ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தவிதப் பிரச்சினைகளும் எழவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி என்றுமே தேவையான சந்தர்ப்பத்தில் உரிய முடிவுகளை எடுக்கும்.

எந்தவொரு நபரும் விரல்நீட்டி ஊழல்மோசடி செய்தவர் எனக் கூறமுடியாத திறமையான, நேர்மையான, நாட்டை நேசிக்கும் ஒருவரையே ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக நியமித்துள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறக் கூடிய எந்தவொரு தேர்தலிலும் வெற்றிபெறக்கூடிய பலம் பொருந்திய நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. நாளை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதில் நாமே வெற்றிபெறுவோம். அதனை எவராலும் தடுக்கமுடியாது. ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக தூய்மையான ஒருவரையே நியமித்திருக்கிறது. எனினும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நியமித்துள்ள வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல நிறுவனங்கள் வழங்கிய 82 மில்லியன் ரூபாவை மோசடியாக தனியார் கணக்கில் வைப்பீடு செய்தமை தொடர்பான சகல தகவல்களும் வெளியாகியிருக்கும் நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ அந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பிச்செல்லப் பார்க்கின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## ஆகஸ்ட் 8 இல்.....

அதுதவிர எதிர்வரும் 9 ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சகல தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் கூட்டமொன்று அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்கும் ஏனைய செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்குமே இக்கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## டிசம்பர் 22 ஆம்.....

தாஸ ஆகியோர் மக்களுடன் இருந்து காலிமுகத்திடல் மற்றும் தலதா மாளிகையில் பகிரங்கமாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஆனால் சந்திரிகா குமாரதுங்க ஒரு அறையினுள் இரகசியமாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நாடு தற்போது அராஜகமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கூட்டணி அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகக் கூறியபோதிலும் வாழ்க்கைச் செலவை அதிகரித்தே வந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி நடத்திய மாபெரும் மக்கள் பேரணியைக் கண்டே சிறிலங்கா சுதந்திரக்கட்சி தங்களின் ஜனாதிபதி வேட்பாளரை நியமித்தது. ஐக்கிய தேசியக்கட்சியின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினார்.

அந்நியச்செலாவணியை சம்பாதித்தார். பல அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தார் எனக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது ஒன்றரை வருட பதவிக் காலத்தில் என்ன செய்துள்ளாரெனக் கேள்வி எழுப்பினார்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மேற்கொண்ட கணக்கெடுப்பில் விக்கிரமசிங்கவிற்கு 45 சதவீதத்தினரும், மகிந்த ராஜபக்ஷவிற்கு 27 சதவீதத்தினரும் ஆதரவாக வாக்களித்துள்ளனர் என தெரியவந்துள்ளது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (சு)

## 8 ஆம் ஆண்டு நிங்காத நினைவுகள்

பிறப்பு 1934 12 27



இறப்பு 1997 08 03

### வீரகத்தி இராசதுரை (பூச்சி)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி,
எட்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள்- எம்
இதயத்தை விட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி

இல.2 முத்தமிழ் வீதி,
3ஆம் ஒழுங்கை, கொட்டடி
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

மனோகரா யாழ்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின அதிரடிவெளியீடாக
மாதவன், சதா, கோவை சரளா நடித்த




கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
மக்கள்திலகம்
எம்.ஜீ.ஆர், லதா, நாகேஷ்
நடித்த
உரிமைக்குரல்
கா.நே.11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
கா.நே. 10.30, 02.30 06.30 09.30




இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.